BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு விளக்கவுரை

THE NEW TESTAMENT COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

மனுஷனோடு தேவன் செய்திருக்கும் புது உடன்படிக்கை

இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவன் மனிதனோடு செய்த புது உடன்படிக்கையே புதிய ஏற்பாடு ஆகும். தேவன் நம்மை நித்திய அழிவிலிருந்து எவ்வாறு இரட்சித்தார் என்பதைப் புதிய ஏற்பாடு கூறுகிறது. கிறிஸ்துவின் மூலமாக அவருடைய ராஜ்யத்துக்குள் நாம் எவ்வாறு கொண்டு வரப்பட முடியும் என்பதையும், நம்முடைய அநுதின ஜீவியத்தில் அவருடைய வல்லமையை எங்ஙனம் அனுபவிக்கக் கூடும் என்பதையும் இது விளக்குகிறது. மேலும், நம்முடைய இரட்சகரின் மகிமையான இரண்டாம் வருகையையும், அவருக்குள் நமக்கிருக்கும் ஆச்சரியமான முடிவையும் புதிய ஏற்பாடு விவரித்துரைக்கிறது.

பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்டக் காலம்

ஒருவேளை நீங்கள் பழைய ஏற்பாட்டை ஏற்கெனவே படித்திருக்கலாம். அவ்விதமானால், யூதர்கள் எருசலேமில் தேவாலயத்தை மீண்டும் கட்டுவதோடுகூட பழைய ஏற்பாட்டு வரலாறு முடிவடைகிறது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். புதிய ஏற்பாடு துவங்கும் வேளையில், எருசலேம் ரோமரின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதை நாம் காண்கிறோம். அப்படியானால், பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்டக் காலகட்டத்தில் சம்பவித்தது என்ன?

கி.மு. 586 இல் யூதர்களின் கடைசி கூட்டத்தார் எருசலேமிலிருந்து பாபிலோனியரின் சிறையிருப்பின்கீழ் கொண்டு போகப்பட்டனர்.

இந்த யூதர்கள் சிறையிருப்பில் இருக்கும் பொழுது, கி.மு. 539 இல் பெர்சியர்கள் பாபிலோனியரைத் தோற்கடித்தார்கள். யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பிப் போகலாம் எனப் பெர்சியர்கள் அனுமதித்ததினால், அவர்களில் சிலர் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள். இத்துடன் அவர்களுடைய எழுபது வருட சிறையிருப்பின் காலம் முடிவுற்றது. எருசலேமுக்குத் திரும்பிய யூதர்கள் தேவாலயத்தை மீண்டும் கட்டி, தேசத்தில் குடியேறினார்கள். இருப்பினும், யூதர்களில் பலரும் பலஸ்தீனாவுக்குத் திரும்பி வரவில்லை. சிலர் பாபிலோனிலேயே தங்கி விட்டனர். மீதியிருந்தவர்கள் ஜாதிகளிடையே சிதறியிருந்தனர். இது வரலாற்றில் "டயஸ்போரா" எனப்படுகிறது. இதன் பொருள் "கலைத்தல்", "சிதறியிருத்தல்", "பரவியிருத்தல்" என்பனவாகும்.

அடுத்தபடியாக, கிரேக்க மாமன்னனான இளம் அலெக்சாந்தரால் பெர்சியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அவனுடைய சேனைகள் சிரியா, பலஸ்தீனா, எகிப்து உட்பட பெரும் நிலப்பகுதியை வென்றனர். தனது 33-ஆம் வயதில் அலெக்சாந்தர் அகால மரணம் அடைந்ததினால் அவரது சாம்ராஜ்யம் நீண்ட காலம் நீடிக்கவில்லை. இருப்பினும், பலஸ்தீனாவிலும், பண்டைய உலகம் அனைத்திலும் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது.

கி.மு. 323-இல் அலெக்சாந்தரின் மரணத்திற்குப் பிற்பாடு, ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து வந்த இதர அந்நிய ஆதிக்கங்களினால் பலஸ்தீனா ஆளப்பட்டது. அந்தக்காலக்கட்டத்தில் செலூசிட் சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளனான நான்காம் அந்தியோகஸ் (கி.மு.175-164) யூதர்கள் கிரேக்கக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்த முயற்சித்தான். அவன் அவர்களுடைய பாரம்பரிய ஆராதனையைத் தடைசெய்து, அவர்களுடைய தேவாலயத்தின் தூய்மையைக் கெடுத்தான்.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

இவனுடைய கொடூரமான சட்டங்களுக்கு விரோதமாக கி.மு.167-இல் யூதர்கள் புரட்சி செய்தனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு யூதர்கள் எருசலேமின் ஆளுகையை மீண்டும் பெற்று, தேவாலயத்தை சுத்திகரித்தனர். இவர்களின் சுதந்திரப் போர் கி.மு.142 வரை தொடர்ந்தது. இக்காலம் "மக்கபேயரின் காலம்" என அறியப்படுகிறது. "சுத்தியல்" எனப் பொருள்படும் மக்கபேயன் யூதாஸ் யூதப் படைகளின் தீரம்மிக்க பட்டாளத்துத் தலைவனாக இருந்தபடியால் இப்பெயர் வழங்கலாயிற்று.

கி.மு. 142 முதல் கி.மு. 63-இல் ரோமத் தளபதி பாம்பே எருசலேமைக் கைப்பற்றும் வரைக்கும் மாத்திரமே யூதர்களின் சுதந்திரம் நிலைத்தது. இச்சமயத்தில் அந்நிய ஆதிக்கத்திற்கு விரோதமாக ஹஸ்மோனியன் ஆட்சியாளர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அவர்கள் தங்களுக்குள்ளேயும் போர் தொடுத்தனர். கி.மு.161-இல் மக்கபேயன் யூதாஸ் கொல்லப்பட்டார். இவருடைய கடைசி தம்பியான சீமோன் மக்கபேயனின் வழித்தோன்றலே, ஹஸ்மோனியன் மரபினர் ஆவர். இக்காலக்கட்டத்தில், சுமார் கி.மு. 200 முதல் இப்பகுதியில் படைபலம் வாய்ந்திருந்த ரோம வல்லமை தொடர்ந்து வலுவடைந்தது. யூதர்களை ஆளுபவனாக ரோம அரசால் நியமிக்கப்பட்ட பெரிய ஏரோதுவினால், ஹஸ்மோனியனின் கடைசி ஆட்சியாளன் கி.மு.37-இல் கொல்லப்பட்டார்.

புதிய ஏற்பாடும் அதின் உலகமும்

இயேசு கிறிஸ்து அவதரித்த உலகம் மூன்று முக்கிய செல்வாக்குகளின் வடிவமைப்பாயிருந்தது: ரோமரின் வல்லமை, கிரேக்கர்களின் கலாச்சாரம், யூதர்களின் மதம். தமது குமாரன் பூலோகத்தில் அவரது ஊழியத்தைச் செய்யும் வேளைக்காக வழியைச் செவ்வைபடுத்தும்படி இச்செல்வாக்கு ஒவ்வொன்றையும் தேவன் எவ்விதம் பயன்படுத்தினார் என்பதை இந்தப் பாடத்தில் நீங்கள் காண்பீர்கள். "காலம் நிறைவேறின போது" தமது குமாரனைத் தேவன் நமக்காக அனுப்பினார். (கலாத்தியர் 4:5).

இருபத்தேழு புத்தகங்கள் இருந்த போதிலும், ஒத்திசைவு உடைய ஒரே புத்தகம் போல உருவாக்கப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டின் கண்ணோட்டத்தை இப்பாடம் வழங்குகிறது. இருப்பினும், இப்புத்தகங்கள் அனைத்தின் ஒரே ஒரு முக்கிய தூது இதுவே: இயேசு கிறிஸ்து மூலம் தேவன் மனிதனோடு ஓர் புதிய ஒப்பந்தத்தைச் (ஏற்பாட்டை) செய்திருக்கிறார்.

வரலாற்றுச் சம்பவங்களுக்குப் பின்னால் எவ்விதம் தேவகரம் இருந்தது என்பதைக் காணும்படி இந்தப் பாடத்தின் உண்மைகள் உங்களுக்கு உதவும்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் பாலஸ்தீனம் ரோமரால் ஆளுகை செய்யப்பட்ட போதிலும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மொழி கிரேக்கம் என்பது வியப்புக்குரிய விஷயமாகும். புதிய ஏற்பாட்டின் நாயகனாகிய இயேசு யூதனும், அவரது வருகையைப் பற்றி பழைய ஏற்பாட்டு வேதாகமங்களில் முன்னுரைக்கப்பட்ட மேசியாவாகவுமிருந்தார். மேலும், அநேக விதமான புறஜாதி மார்க்கங்களையும், இரகசிய வழிபாட்டுக் கொள்கை முறைகளைப் பின்பற்றின ஜனங்களைப் பற்றியும் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் நாம் வாசிக்கிறோம். இருப்பினும், புதிய ஏற்பாட்டு உலகை வடிவமைத்த முப்பெரும் வல்லமைகள் யாதெனில், ரோம வல்லமை, கிரேக்க கலாச்சாரம், யூத மார்க்கம் ஆகியவையே.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

ரோம வல்லமை

"அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது" என லூக்கா 2:1-இல் நாம் வாசிக்கிறோம். ராயன் (சீசர்) என்பது ரோம சக்கரவர்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப் பெயராகும். புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் ரோமசக்கரவர்த்திகள் "ராஜா" என்றும் குறிப்பிடப்படுகிறார்கள். (உம். 1 பேதுரு 2:17). புதிய ஏற்பாடு எழுதப்பட்ட நாட்களில், ரோம சாம்ராஜ்யம் மத்தியதரைக்கடல் மேற்கு முடிவிலிருந்து, கிழக்குப்பக்கத்திலுள்ள ஐப்பிராத்து நதிவரைக்கும் விரிந்து பரவியிருந்தது.

இப்பெரும் நிலப்பகுதி முழுவதும் ரோமப் பேரரசின் ஆளுகையின் கீழிருந்தது. ரோமர்கள் தங்களுடைய பேரரசை இராணுவத் தளங்களுடன் கூடிய மாகாணங்களாகவும், பகுதிகளாகவும் பிரித்திருந்தார்கள். மக்கெதோனியா, அகாயா, சீரியா, ஆசியாகலாத்தியா, பம்பிலியா என்பது போன்றபல மாகாணங்களின் பெயர்கள் புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

ரோம வல்லமையும், அரசியல் பலமும் அரசியல் ஒற்றுமை, இராணுவ சமாதானம், வியாபாரம் மற்றும் பயணஞ் செய்வதில் சுயாதீனம் ஆகியவற்றை உருவாக்கிற்று. ரோமரால் ஜெயிக்கப்பட்ட தேசங்கள் அனைத்தும் ஒரே ஆளுகையின்கீழ் கொண்டுவரப்பட்டன. ரோம சமாதானம் அமுல்படுத்தப்பட்டு, தேசங்களுக்கு இடையே நடைபெற்ற போர்கள் ஓய்ந்தன. ரோமப் பிரஜைகளுக்கு சிறப்புப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அவர்கள் தவறாகக் கைது செய்யப்படலாம் அல்லது துன்புறுத்தப்படலாம் என்ற அச்சமின்றி ரோம சாம்ராஜ்யத்தின் எந்தப் பகுதிக்கும் செல்லலாம். புதிய பகுதிகளில் கிறிஸ்துவின் தூதை பரப்பும்படி தேவனால் மிகவும் பயன்படுத்தப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் அநேகந் தடவைகளில் ரோமப் பிரஜைக்குரிய சிறப்புப் பாதுகாப்பை சார்ந்திருந்திருக்கிறார் (அப்போஸ்தலர் 16:38; 22:29).

சிறந்த சாலைகளையும், உறுதியான பாலங்களையும் அமைப்பதில் ரோமர்கள் நிபுணர்களாயிருந்தார்கள். இவை திருடர் பயமற்ற சாலைகளாகும். அவர்களுடைய சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு பகுதியும் தலைநகரமாகிய ரோமுடன் இணைக்கப்பட்டிருந்தது. எனவேதான், "எல்லா சாலைகளும் ரோமுக்கு வழிநடத்துகின்றன" என்ற வழக்கச் சொல் வழங்கலாயிற்று. கடற்கொள்ளையர் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டனர். இதுகாறும் இல்லாத அளவில் பாதுகாப்பு, சுயாதீனம், சுகப்பிரயாணம், தகவல் தொடர்பு ஆகியவை உண்டாயின.

கிரேக்க நாகரீகம்

ரோமர்கள் உலகத்தை அரசாளுபவர்களாக இருந்தபோதிலும், கிரேக்க மொழியும், சிந்தனையுமே கலாச்சார ஆதிக்கம் செலுத்திற்று. "ஒரே மொழி, ஒரே உலகம் !" இதுவே மகா அலெக்சாந்தரின் தாரகமந்திரமும், பேராவலுமாயிருந்தது. அவர் கைப்பற்றிய நாடுகள் அனைத்தையும் தனது ஆளுகையின் கீழ் ஒழுங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவருடைய பேரரசின் எவ்விடங்களிலும் கிரேக்க மொழி கற்றுக் கொடுக்கப்பட்டது. சிந்தனையின், வாழ்க்கையின் மாதிரியாக கிரேக்க கலாச்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது புதிய ஏற்பாட்டு உலக மக்களின் உள்ளத்தில் ஆழமான விளைவை உண்டாக்கிற்று.

அலெக்சாந்தரின் அரசியல் சாம்ராஜ்யம் குறுகிய காலமுடையதாக இருந்தபோதிலும், கிரேக்கக் கலாச்சார விளைவு மிகப் பெரியதும், நீடித்ததுமாயிருந்தது.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

கிரேக்களின் சட்டடக் கலை நாகரீகத்தை அநேக நகரங்கள் பிரதிபலித்தன. அகிலாண்டத்தின் (தேவனும், மனிதனும்; நன்மையும், தீமையும்) துவக்கம், அதன் பொருள் ஆகியவை பற்றிய காரியங்களைக் கேட்டு அறிந்து கொள்ளும் படியான சுபாவம் கிரேக்கர்களுக்கு இருந்தது. கிரேக்கக் கலாச்சாரத்தால் கவரப்பட்ட நாடுகளில் உள்ளவர்களும் இவ்வித இயல்புடையவர்களாயிருந்தனர். அரசாளுபவர்களின் மொழியும், அடிமைகளின் சாதாரணப் பேச்சும் கிரேக்க மொழியாயிருந்தது. கடிதங்கள், கவிதைகள், வியாபாரத் தகவல்கள் அனைத்தும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. "கிரேக்கர்" எனப் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டப் பதமானது, கிரேக்க நாட்டு மக்களை மாத்திரமின்றி, யூதர் அல்லாதவர்களின் நாடுகளிலும் கிரேக்க மொழி பேசுபவர்கள் அனைவரையும் குறிப்பிடுகிறது. கிரேக்க மொழி எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்பட்டது.

ரோமர்கள் ஆட்சிக்கு வந்தபொழுது, அவர்களால் கைப்பற்றப்பட்டத் தேசங்களுடன் தகவல் தொடர்பு கொள்வதற்கு கிரேக்க மொழியே சாலச்சிறந்தது எனக் கண்டனர். ரோம வாலிபர்கள் ஏதென்ஸ், ரோடீஸ், டார்ஸஸ் போன்ற கிரேக்க கலாசாலைகளில் கல்வி பயிலும்படி அனுப்பப்பட்டனர். இறுதியாக ரோமிலும் கூட கிரேக்க மொழி பரவலாகப் பேசப்பட்டது.

கிறிஸ்தவ நற்செய்தியை எடுத்துரைக்கவும் கிரேக்க மொழி ஈடிணையற்ற சாதனமாயிற்று. கிரேக்க மொழி எவ்விடத்திலும் பயன்படுத்தப் பட்டதால், மொழிபெயர்ப்பாளர்களின் துணையின்றி அப்போஸ்தலர்கள் கிரேக்க மொழியில் பிரசங்கிக்க முடிந்தது.

கிரேக்க மொழி பரவலாகப் பயன்படுத்தப்பட்டதின் காரணத்தினாலேயே பெரும்பாலும் யூதர்களால் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எல்லாம் முதலில் கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டன. தேவனுடைய செய்தியுடன் முழு உலகத்துக்காகவும் கிறிஸ்து வந்தபொழுது, அந்தச் செய்தி அனைவராலும் புரிந்துகொள்ளக் கூடிய உலகமொழி வழக்கில் இருந்தது. இது கர்த்தரின் முன்னேற்பாடு அன்றோ!

யூத மார்க்கம்

கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்பதற்கு உலகத்தை ஆயத்தம் பண்ணும்படிக்கு தேவன் எவ்விதமாக ரோமரின் அதிகாரத்தையும், கிரேக்கக் கலாச்சாரத்தையும் உபயோகித்தார் என நாம் கற்றுக்கொண்டோம். இதே நோக்கத்திற்காக, யூதர்களையும், யூத மார்க்கத்தையுங் கூட தேவன் பயன்படுத்தினார். அவர் யூதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி, வரப்போகும் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை அவர்களுக்கு அருளிச் செய்தார். இந்த தீர்க்கதரிசனங்களும், வெளிப்படுத்தல்களும் அவ்வப்போது எழுதப்பட்டு, பழைய ஏற்பாட்டுடன் சேர்க்கப்பட்டன. பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில் யூதர்கள் நாடுகடத்தப்பட்டிருந்தபொழுது, யூதர்களின் வாழ்க்கையிலும், மார்க்கத்திலும் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாக, பழைய ஏற்பாட்டின் போதனைகள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவிற்று. இவற்றின் முன்னேற்றங்களை அடுத்த பிரிவில் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில் யூத சமயம்

யூதர்கள் நாடுகடத்தப்பட்டிருந்த வேளையில், பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில் யூத சமயத்தில் மூன்று முக்கியமான முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. அவையாவன: (1) ஜெப ஆலய ஆராதனையின் எழுச்சி (2) யூதரல்லாதவர்கள் யூதசமயத்தைத் தழுவியது

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

(3) பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தது.

1. ஜெப ஆலய எழுச்சி. யூதர்கள் நாடுகடத்தப்பட்டபொழுது பழைய ஏற்பாட்டு வேதாகமத்தையும் தங்களோடு எடுத்துச் சென்றார்கள். அவர்களுடைய சமயப் பழக்க வழக்கங்களுக்கு வேதாகம எழுத்துக்கள் அடிப்படையாயிருந்தன. சிறையிருப்பின் நாட்களில் அவர்கள் தேவாலயத்தில் ஆராதிக்கவோ அல்லது மிருகங்களைப் பலி செலுத்தவோ கூடாமலிருந்தனர். இருப்பினும், உண்மையான ஒரே தேவனைத் தொழுவதை அவர்கள் தொடர்ந்து செய்தனர்.

வேதாகமத்தைக் கலந்துரையாடவும், கற்றுக்கொள்ளவும் ஜெப ஆலயம் என அழைக்கப்படும் விதத்தில் சிறிய சிறிய கூட்டங்களாக அவர்கள் கூடினார்கள். ஒரு ஜெப ஆலயத்தை உருவாக்குவதற்கு பத்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண் அங்கத்தினர்கள் இருந்தால் போதுமானதாயிருந்தது. ஒரு பட்டணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஜெபஆலயங்கள் இருக்கலாம். ஜெபஆலய ஆராதனையில் நியாயப்பிரமாணங்களிலிருந்தும், தீர்க்கதரிசனங்களிலிருந்தும் வாசிப்பதுண்டு. தேவனுடைய ஜனத்தை விடுதலையாக்கக் கூடியதோர் மேசியாவின் வருகையைப் பற்றி தீர்க்கதரிசிகள் எழுதியிருந்தனர். யூதர்கள் இவற்றைக் கற்றறிந்ததினால், சிறையிருப்பிலிருந்து அவர்களை மீட்கக் கூடிய இவரை நோக்கிப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

2. யூதரல்லாதவர்கள் யூத சமயத்தைத் தழுவியது: யூதர்கள் பாபிலோனின் சிறையிருப்பில் இருந்த வருஷங்களில், பாபிலோனியர் கர்த்தரை அறிந்து கொள்ளும் விதத்தில் அவர் அவர்களைப் பயன்படுத்தினார். தானியேல், மற்றும் அவனுடைய மூன்று சிநேகிதர்களின் (சிறைபிடிக்கப்பட்டு, பாபிலோனுக்குக் கொண்டுவரப்பட்ட யூத வாலிபர்கள்) ஜீவியத்திலிருந்த தேவவல்லமையை ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எவ்விதம் நேரில் கண்டான் என்பது பழைய ஏற்பாட்டின் தானியேல் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிறிதொரு சந்தர்ப்பத்தில், "மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவருமாயிருக்கிறார் என்று இந்த ராஜாவே தன் வாயினால் அறிக்கையிட்டார் *(தானியேல் 2:47)*. யூதர்கள் தங்களுடைய தேவனைத் தொழுது கொள்வதற்கும், அவரைக் குறித்துப் போதிப்பதற்கும் அவர்களுக்கு சுயாதீனம் அளிக்கப்பட்டது. எழுபது வருட சிறையிருப்புக்குப் பின்னர் யூதர்களில் ஒரு கூட்டம் எருசலேமுக்குத் திரும்புவதற்கு அனுமதி கிடைத்தது. இருப்பினும், பலரும் பாபிலோனில் தங்கிவிட்டனர். நாளடைவில் அவர்கள் ரோம சாம்ராஜ்யத்தின் வெவ்வேறு இடங்களில் குடியேறினார்கள். அவர்கள் சென்றவிடமெங்கும் தங்களுடைய தேவனைப் பற்றிய நம்பிக்கையையும், வரப்போகும் மீட்பரைப் பற்றிய வாக்குத்தத்தத்தையும் சுமந்து சென்றனர். ஆகவேதான், மத்தேயு 2:1, 2-இல் சொல்லப்பட்டபடி யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிற பாலகனைப் பணிந்து கொள்ளும்படி கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்ததைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

பாபிலோனில் தங்காமலும், பாலஸ்தீனாவுக்குத் திரும்பாமலுமிருந்த யூதர்கள் சிறிய ஆசியாவிலுள்ள எகிப்து, க்ரீஸ், மக்கெதோனியா, ரோம் போன்ற நாடுகளுக்கும், இதரப் பெரிய பட்டணங்களுக்கும் பரவினார்கள். முடிவில், யூதர்களுக்கு ஒவ்வொரு நாட்டிலும் குடியிருப்புகள் உண்டாயின. உண்மையில், பாலஸ்தீனாவில் குடியிருந்த யூதர்களைக் காட்டிலும், வெளியில் வாழ்ந்தவர்களே அநேகராயிருந்தனர்.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

யூதர்கள் சிதறப்பட்டதின் விளைவாகவே, உண்மையான ஒரே தேவனையும், மேசியாவின் வருகையையும் பற்றிய போதனைகள் பிரபல்யமாயின. யூத சமயம் மூட நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாயிருந்ததால், பாலஸ்தீனாவிலும், இதர இடங்களிலும் உள்ள யூதர் அல்லாதவர்கள் யூதசமயத்தில் சேர்ந்தனர். இவர்கள், "பிராசிலிடெஸ்" (மதம் மாறியவர்கள்) என்றும், "தேவபக்தியுள்ளவர்கள்" என்றும் அழைக்கப்பட்டார்கள். இதில், மதம் மாறியவர்கள் விருத்தசேதனம் உட்பட நியாயப்பிரமாணத்தின் சகல நியமங்களுக்கும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். இவர்கள் யூத சமுதாயத்தின் ஒட்டுமொத்த அங்கத்தினர்களாகவே கருதப்பட்டனர். இதற்கு மாறாக, தேவபயமுள்ளவர் என அழைக்கப்பட்டவர்கள் யூத போதனையை ஏற்றுக்கொண்டார்கள், ஆனால் நியாய பிரமாணத்தை நிறைவேற்றாதவர்களாயிருந்தார்கள். இவர்களுக்கு முழு உறுப்பினர் நிலை அளிக்கப்படவில்லை.

3. செப்டுவாஜின்ட் **(The Septuagint)**. யூதர்கள் சென்றவிடமெங்கும் தங்களுடைய வேதத்தை எடுத்துச் சென்று, தாங்கள் தோற்றுவித்த ஜெபஆலயங்களில் அவற்றைப் போதித்தனர். பழைய, புதிய ஏற்பாட்டுக்கு இடைப்பட்டக் காலத்தில் பழைய ஏற்பாட்டு வேதாகமம் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த மொழிபெயர்ப்புப் பணி எகிப்தில் உள்ள அலெக்சாந்திரியா பட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பு ("எழுபது என்று பொருள்படும்) "செப்டுவாஜின்ட்" என்று அழைக்கப்பட்டது. எபிரெய வேதவசனங்களை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்க எழுபத்திரண்டு (கோத்திரத்துக்கு ஆறாக, பன்னிரெண்டு கோத்திரங்களிலிருந்தும்) யூத வல்லுநர்கள் யூதேயாவிலிருந்து வந்தார்கள் என்பது பாரம்பரியக் கூற்றாகும். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னதாக பழைய ஏற்பாட்டுப் போதனைகளைக் கிரேக்க மொழி பேசும் இடங்களிலெங்கும் பரப்புவதற்கு இந்த மொழிபெயர்ப்பு பெரிதும் உதவியாயிருந்தது. இந்த மொழிபெயர்ப்பு யூதர்கள், யூதர்களானவர்கள், புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்கள், சுவிசேஷத்தை முதன் முதலில் பிரசங்கித்தவர்கள் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டது.

முக்கியமான தகவலின் மறுபார்வை

1. யூதர்கள் நாடுகடத்தப்பட்டு பாபிலோனில் எழுபது வருஷம் முடிந்த பின்பு, அவர்கள் எருசலேமுக்குத் திரும்பும்படி பெர்சியா ராஜா கட்டளையிட்டான் (2 நாளாகமம் 36:21-23). பெர்சியா பேரரசு மகா அலெக்சாந்தரால் தோற்கடிக்கப்பட்டது. இவன் கி.மு.323-இல் மரித்தான். இதன்பின் அடுத்தடுத்து இதர பல அந்நிய வல்லமைகளால் பாலஸ்தீனா ஆளப்பட்டது. கி.மு.167-இல் செலூசிட் ஆட்சியாளர்களுக்கு விரோதமாக அவர்கள் புரட்சி செய்தனர். அவர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி, சுதந்திரத்துடன் வாழ்ந்தார்கள். கி.மு.63-இல் ரோமத் தளபதியான பாம்பே யூதர்களைத் தோற்கடித்தான். எருசலேம் ரோமானியருக்குக் கப்பம் கட்ட வேண்டியதாயிற்று. கி.மு. 37-இல் ரோமப் பேரரசு யூதர்களின் ராஜாவாக ஏரோது ராஜாவை நியமித்தது.

2 புதியஏற்பாட்டு உலகை உருவேற்படுத்திய முப்பெரும் வல்லமைகள் ரோமர் பரிபாலனம், கிரேக்ககலாச்சாரம், யூதசமயம் ஆகியவையாகும்.

3. கிறிஸ்துவின் தூது மிகத்தீவிரமாகப் பரவக்கூடிய காலகட்டத்தில் அவர் இவ்வுலகுக்கு வந்தார் என்பதைப் புலப்படுத்தும் நான்கு முக்கியமான உண்மைகள்:

அ. ரோமர் அதிகாரத்தில் இருந்ததின் பொருட்டு, பாதுகாப்பு, சுதந்திரம், எளிதான பயணம், நாடெங்கும் தகவல் தொடர்பு முதலானவை இருந்தன.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

ஆ. கிரேக்கக் கலாச்சாரத்தின் செல்வாக்கின் பொருட்டு, ரோமப் பேரரசு முழுவதிலும் கிரேக்க மொழி வழக்கில் இருந்தது.

இ. யூதசமயம், மற்றும் நாடுகளிடையே யூதர்கள் சிதறியிருந்ததின் மூலம், மேசியாவின் வருகையைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் அநேக இடங்களில் அறிந்துகொள்ளவும், கற்றுக்கொள்ளவும் ஏதுவுண்டாயிற்று.

ஈ. பல்வேறு வழிகளில் ஆன்மீகப் பரிகாரத்தையும், திருப்தியையும் கண்டு கொள்ளும்படி ஜனங்கள் முயற்சித்துக் கொண்டிருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் பலவிதமான இதர மதங்கள் தோன்றியிருந்தன.

4. யூதர்கள் நாடுகடத்தப்பட்டிருந்த வேளையில், பழைய புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில் யூத சமயத்தில் மூன்று முக்கியமான முன்னேற்றங்கள் நிகழ்ந்தன: ஜெப ஆலய ஆராதனையின் எழுச்சி, யூதரல்லாதவர்கள் யூதசமயத்தைத் தழுவியது, பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தது (செப்டுவாஜின்ட்).

5. சில முக்கியமானப் பதங்களின் பொருள் பின்வருமாறு:

அ. பிராசிலிட் - யூதசமயத்தைத் தழுவி, விருத்தசேதனம் பெற்று, நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்தவர்கள்.

ஆ. தேவபக்தியுள்ளவர் - நியாயப் பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முயற்சிக்காதவர்கள்.

இ. செப்டுவாஜின்ட் - பழைய ஏற்பாட்டு வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பு.

ஈ. ஜெப ஆலயம் - வேதத்தைக் கற்றுக்கொள்ளும்படி குறைந்தது பத்து யூத ஆண்கள் கூடும் சிறுகூட்டம்.

புதிய ஏற்பாட்டு யூதசமயம்

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக, பழைய, புதிய ஏற்பாட்டு இடைப்பட்டக் காலத்தில் யூதசமயத்தில் உண்டான முன்னேற்றங்கள் எவ்வாறு உலகை ஆயத்தப்படுத்திற்று என நாம் கற்றுக்கொண்டோம். இப்பொழுது, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த யூத சமயத்தின் சில குறிப்பிட்ட அம்சங்களை நாம் கவனிப்போமாக.

1. சமயப் பிரிவுகள்: யூதசமயத்திற்குள் இருபெரும் பிரிவுகள் அல்லது கட்சிப்பிளவுகள் இருந்தன: ஒன்று "பரிசேயர்" மற்றொன்று "சதுசேயர்". தேவனுடைய உண்மையான இஸ்ரவேலாக இருப்பதாகப் பரிசேயர் தங்களைக் கருதினார்கள். "பரிசேயர்" என்பதின் பொருள் "வேறுபிரிக்கப்பட்டவர்" என்பதாகும். அவர்கள் எழுதப்பட்டநியாயப்பிரமாணத்தையும், மூப்பர்களின்பாரம்பரியங்களையும்பின்பற்றினார்கள் எழுதப்பட்டதீர்க்கதரிசனங்களை ஏற்றுக்கொண்டார்கள் வேதத்தை வியாக்கியானிக்கும் "வேதபாரகர்கள்", நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவதிலும், அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையின் மாறுதலுக்கேற்ப அவற்றைக் கடைப்பிடிப்பதிலும் இவர்களுக்கு உதவி புரிந்தார்கள். தூதர்கள், ஆவிகள், மரித்தோரின் உயிர்த்தெழுதல் முதலானவை உண்டென்று இவர்கள் விசுவாசித்தார்கள். சடாங்காச்சாரமான ஜெபம், உபவாசம் ஆகியவற்றை செயல்முறைப்படுத்தினார்கள். தங்களுக்குண்டான எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தார்கள். இவர்கள் ஓய்வுநாளில் வேலை செய்யவும் மாட்டார்கள். வேலை செய்யும்படி வேறு எவரையும் அனுமதிக்கவும் மாட்டார்கள்.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

அவர்கள் யார் மீது நன்மதிப்பு கொண்டிருந்தார்களோ அவர்களை பரிசுத்த மனிதர்களாகவே மதித்து வந்தார்கள். யூதசமயத்தின் மீதுள்ள வைராக்கியத்தினால், யூதரல்லாத அநேகரைத் தங்களது விசுவாசத்திற்கு ஆதாயப்படுத்திக் கொண்டார்கள். கிறிஸ்துவுக்காக மாற்றப் படுவதற்கு முன் அப்போஸ்தலனாகிய பவுல் பரிசேயனாக இருந்தார். ஜெப ஆலயங்களில் வேதபாரகர்களும், பரிசேயர்களும் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக இருந்தார்கள்.

இதற்கு எதிர்மாறாக சதுசேயர்கள், தீர்க்கதரிசனங்களைப் புறக்கணித்து, நியாயப் பிரமாணத்தை மாத்திரம் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்கள். மூப்பர்களின் பாரம்பரியங்களையும் புறக்கணித்தார்கள். தூதர்கள், ஆவிகள், மரித்தோரின் உயிர்த்தெழுதல் முதலானவைகளில் நம்பிக்கையற்றவர்களாயிருந்தார்கள். அவர்கள் ஆட்சியாளர்களிடம் செல்வாக்கு பெற்று, மதசடங்காச் சாரங்கள், தேவாலய நிர்வாகம், அரசியல் அதிகாரம் ஆகியவற்றில் நாட்டம் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களில் பெரும்பான்மையானோர் ஆசாரியர்களாக இருந்தார்கள்.

ரோமர் திறமை வாய்ந்த நிர்வாகிகளாக இருந்த போதிலும், பாலஸ்தீனாவிலுள்ள யூதர்களில் அநேகர் அவர்களுடைய ஆட்சியின் மீது மிகுந்த சினங் கொண்டிருந்தார்கள். ரோமரின் பரிபாலனம் அவர்களது வாழ்க்கையின் நியமனமாயிருந்தது. இதன் விளைவாக, தொடர்ந்து யூதரால் குழப்பமும், அமைதியின்மையும் நிலவிற்று. இவ்விதம் அரசியல் நெருக்கடிகள் அதிகரித்ததால், யூதர்களின் தலைவர்களில் அநேகர், அரசு அதிகாரங்களுக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சி, அமைதியின்மை போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிப்பதில் மென்மேலும் கவனம்செலுத்தினர்.

2. ஆலோசனைச் சங்கம். இருப்பினும், அரசியல் மற்றும் மதம் சார்ந்த விஷயங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள ஓரளவு அதிகாரம் அளிக்கப்பட்டது. எழுபது உறுப்பினர்கள் அடங்கி "சனகெரிப்" எனப்பட்ட ஆலோசனைச் சங்கத்துக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டது. பிரதான ஆசாரியன் இச்சங்கத்தின் தலைவனாயிருந்தான். இதன் அங்கத்தினர்கள் பெரும்பாலும் ஆசாரியத்துவ மற்றும் செல்வந்தர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். ஜனங்களிடத்தில் பிரசித்திபெற்றிருந்த பரிசேயர்களில் சிலர் சனகெரிப்பில் அங்கம் வகித்தனர். இருப்பினும், சனகெரிப்பில் பெரும்பான்மையான இடங்களை சதுசேயர் பெற்றிருந்தனர்.

3. தேவாலயம். இயேசுவின் ஊழிய நாட்களில் எருசலேமில் புகழ் வாய்ந்த தேவாலயம் இருந்தது. இதனைக் கட்டி எழுப்பிய அரசனான பெரிய ஏரோதின் பெயரால், "ஏரோதின் தேவாலயம்" என அழைக்கப் படுகிறது. சாலொமோனின் ஆலயமும், "இரண்டாம் தேவாலயமும்" கட்டப்பட்டிருந்த அதே இடத்தில் இத்தேவாலயம் நிர்மாணிக்கப் பட்டது. சாலொமோனின் ஆலயம் கி.மு. 586-இல் பாபிலோனியரால் அழிக்கப்பட்டது. நெகேமியாவின் காலத்தில் எருசலேமின் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களால் "இரண்டாம் தேவாலயம்" மீண்டும் கட்டப்பட்டது. இத்தேவாலயம் நாலாம் அந்தியோகஸ் என்ற ஆட்சியாளனால் பல விதங்களில் தீட்டுப் படுத்தப்பட்டது. பின்னர் யூதாஸ் மக்கபேயன் இதனைச் சுத்திகரித்தார். நாளடைவில் சிற்சில இடிமானங்கள் ஏற்பட்டன. ஏறக்குறைய கி.மு.20-இல் ஏரோதுவினால் மீண்டும் கட்டப்பட்டது.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

ஏரோதின் தேவாலயம் முந்தி இருந்தவைகளுக்கு ஒத்ததாயிருந்தது. யூதரல்லாதவர் உட்பிரவேசிக்கக் கூடாதபடிக்கு, இதில் அநேக வாசல்களும், ஓர் உட்சுவரும் இருந்தன. பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிப்பதற்குப் பெரிய திரைச்சீலை ஒன்றிருந்தது. பிரதான ஆசாரியனைத் தலைமையாகக் கொண்ட ஆசாரியர் கூட்டம் ஆலயப் பணிகளைச் செய்து வந்தனர். ஆலயக் கட்டடத்தைப் பாதுகாப்பதற்கும், ஆசாரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு ஆண் இஸ்ரவேலனும் ஆலய வரி (இரு நாள் சம்பளத்திற்குச் சமமானது) செலுத்த வேண்டியதாயிருந்தது.

4. பண்டிகைகள். "டயஸ்போரா" என அழைக்கப்பட்ட யூதர்கள் பரவலாக சிதறப்பட்ட போதிலும், இன்னமும் தங்களுடைய தலைநகரம் எருசலேம் என்றே கருதி வந்தனர். ஒவ்வொரு ஆண்டும் யூதமதத்தைத் தழுவியவர்களும் (பிராசிலைட்டெஸ்), தேவபக்தியுள்ளவர்களுமான ஆயிரக்கணக்கான யூதர்கள் பெரும் சமயப் பண்டிகைகளில் கலந்து கொள்ளுமாறு யாத்திரீகர்களாக எருசலேமுக்குச் செல்வதுண்டு. அவர்களுடைய வரலாற்றில் முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சிகளான பண்டிகைகளைக் கொண்டாடுவதில் அவர்கள் பாலஸ்தீனாவிலுள்ள யூதர்களுடன் சேர்ந்து கொள்வார்கள். ஒவ்வோராண்டும் கொண்டாடப் பட்ட ஏழு பண்டிகைகளில் இரண்டு புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவை: "பஸ்கா", "பெந்தெகொஸ்தே".

பஸ்கா மிகவும் முக்கியமான பண்டிகை. யூதர்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப் பட்டதையும், அவர்களுடைய சுதந்தரத்திலுள்ள துவக்கத்தையும் ஒவ்வோராண்டும் பஸ்கா நினைப்பூட்டிற்று. தேவன் எவ்விதம் எகிப்தியரின் மீது கடைசி வாதையை (தண்டனையை) வரப்பண்ணினார் என்றும், இதினிமித்தம் அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறி அவர்களுக்குக் கொடுப்பதாகத் தேவன் வாக்குப்பண்ணின தேசத்திற்குப் போகும்படி அனுமதிக்கப்பட்டார்கள் என்றும் யாத்திராகமம் 11,12 அதிகாரங்கள் கூறுகின்றன. தேவனால் அருளப்பட்ட அறிவுரைகளின்படிச் செய்ததின் நிமித்தம், ஒரே இரவில் எகிப்தியரின் மனுஷரிலும், மிருகஜீவனிலும் முதற்பலன்கள் கொல்லப்பட்ட வாதையிலிருந்து இஸ்ரவேலர் தப்பிப் பிழைத்தார்கள். அவர்களும், அவர்களுடைய பிள்ளைகளும் வருடா வருடம் பஸ்கா பண்டிகையை "நித்திய நியமமாகக்" கைக்கொள்ளும்படி இஸ்ரவேலர்களுக்குக் கட்டளையிடப்பட்டது (யாத்திராகமம் 12:24). எருசலேமிலும், அதைச் சுற்றிலும் வாழ்ந்த யூத ஆண்களில் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும், பஸ்கா பண்டிகையை ஆசரிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. ஆதலால், சிதறப்பட்ட யூதர்களில் அநேகரும், யூதசமயத்தை தழுவியவர்களும், தேவபக்தியுள்ளவர்களுமாகிய அனைவரும் எருசலேமில் கூடினார்கள். இதில் பெண்களும் பங்கேற்றார்கள். இக்கொண்டாட்டத்திற்காகக் குழுவினர் திரள் கூட்டத்தாரால் எருசலேம் நிறைந்தது.

பெந்தெகொஸ்தே புதிய ஏற்பாட்டின் காலத்திலும் முக்கியமான பண்டிகையாயிருந்தது. பழைய, புதிய ஏற்பாட்டு இடைப்பட்டக் காலத்தில் இப்பண்டிகையானது, மோசேக்கு பிரமாணம் அருளப்பட்டதின் (யாத்திராகமம் 19 அதிகாரம்). நினைவு கூருதலாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது. யூத சமுதாயத்தில், நியாயப்பிரமாணமும் அதைக் கைக்கொள்வதும் ஆற்றல் மிக்க, ஒருங்கிணைக்கும் சக்தியாயிருந்தது.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

நியாயப் பிரமாணம் அவர்களுக்கு அருளப்பட்ட, தேவனுடைய மிகப் பெரிய ஈவு என யூதர்கள் கருதினார்கள் (சங்கீதம் 1,19,119), இப்பண்டிகை "50 நாட்கள்" என அர்த்தங் கொள்ளும் "பெந்தெகொஸ்தே" எனப்பட்டது, ஏனெனில் இது பஸ்கா பண்டிகைக்குப் பிறகு ஐம்பதாம் நாளில் கொண்டாடப்பட்டது.

5. இதர சமயங்கள்: தேவன் யூத ஜனங்களுக்குத் தம்மை வெளிப்படுத்தியிருந்தார். யூதர்கள் சிதறப்பட்டதின் விளைவாக யூதரல்லாதவர்கள் அநேகர் யூதசமயத்துக்கு மாறியிருந்தனர். இருப்பினும், புதிய ஏற்பாட்டு காலங்களில், அரசியலிலும், உள்நாட்டு விவகாரங்களிலும் கவனம் செலுத்தி வந்தவர்களால் யூதமார்க்கம் ஆதிக்கம் செலுத்தப்பட்டது.

இத்தகைய காரியங்களில் யூதர்கள் அக்கறை கொண்டிருந்த வேளையில், இதர சமயங்கள் ஆண்கள், பெண்கள் ஆற்ற வேண்டிய கடமை பற்றி உரிமை பாராட்டிக் கொண்டிருந்தனர். கீழ்த்திசை, எகிப்து, சிறிய ஆசியா ஆகிய இடங்களிலுள்ள மதங்களையும் அநேகர் பின்பற்றினர். வேறு சிலர், உயிர்த்தெழுதல், சுத்தாங்கம் போன்ற கருத்துக்களை வலியுறுத்திய கிரேக்க இரகசிய மதங்களில் ஈடுபாடு கொண்டிருந்தனர். மற்றும் சிலர் விக்கிரகங்களுக்கும், ஆவிகளுக்கும் அர்ப்பணிக்கப்படும் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றினார்கள். இவை தவிர, ரோம அதிகாரத்திற்கு அடையாளமான ரோம சக்கரவர்த்திகளின் சிலைகளை வணங்குகின்ற ரோம அரசு மதமும் இருந்தது.

இவ்வுண்மைகள் மதங்களின் பால் கொண்டிருந்த பொதுவான விருப்பத்தையும், வாழ்க்கையின் உண்மைப் பொருளைக் கண்டுபிடிக்கும் படியான நாட்டத்தையும் புலப்படுத்துகிறது. ஒருவேளை முழு உலகக் கடவுள் ஒரே ஒருவர்தான் உண்டோ என ஜனங்கள் அதிசயிக்க ஆரம்பித்தனர். தங்களுடைய குற்றங்களைக் கழுவப்பட வேண்டுமென்று அநேகர் ஆவல் கொண்டனர். மரணத்திற்குப் பிற்பாடு மனிதனுக்கு யாது சம்பவிக்கும் என்பதை அறிந்து கொள்ள பேரவா உண்டாயிற்று. அக்காலத்தின் தத்துவங்களில் இவற்றுக்கான ஏற்றுக் கொள்ளப்படத்தக்க விடை காண முடியவில்லை. மனுஷீக அறிவு கொடுத்த முடிவுகள் ஜனங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அநேகர் நம்பிக்கையற்றவர்களாக, ஆவிக்குரிய வெறுமையோடு, கேடுகெட்டவர்களாக, கற்புநெறி தவறியவர்களாக வாழ்ந்தனர். இயேசுவானவர் வருவதற்கான நேரம்தான் என்னே! அவர் தேவமகிமையின் முழுப் பிரகாசத்தினால் மனுஷரின் இருளடைந்த இருதயங்களையும், மனதையும் பிரகாசிப்பிப்பார்!

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. யூதசமயத்தில் காணப்பட்ட இருபெரும் பிரிவுகள் சதுசேயர்கள், பரிசேயர்கள் என்பதாகும். சதுசேயர்கள் நியாயப்பிரமாணத்தை அதிகார பூர்வமானதாக ஏற்றுக் கொண்டார்கள்; தூதர்களையும் ஆவிகளையும் விசுவாசிக்கவில்லை; ஆலோசனைச் சங்கத்தில் ஆதிக்கம் செலுத்தினார்கள். மறுபக்கத்தில் பரிசேயர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதல், தூதர்கள், ஆவிகள் ஆகியவற்றில் நம்பிக்கை உடையவர்களாயிருந்தார்கள்.

"வேதபாரகர்" வேதத்தை வியாக்கியானஞ் செய்து, அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையின் மாற்றத்திற்கேற்ப அதைக் கடைப்பிடித்தார்கள். அரசியல் மற்றும் மார்க்கத்துக்குத் தகுந்த விஷயங்களில் யூதஜனங்களை ஆண்டு நடத்தும்படிக்கு, சனகெரின் என்றும் ஆலோசனைச் சங்கத்திற்கு வரம்புக்குட்பட்ட அதிகாரம் ரோமரால் கொடுக்கப்பட்டிருந்தது. பிரதான ஆசாரியன் இதன் தலைவனாயிருந்தான்.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

யூதசமுதாயத்தின் ஆசாரியத்துவ மற்றும் செல்வந்தர் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் இதன் உறுப்பினராயிருந்தார்கள்.

2. கி.மு. 20-ல் கட்டப்பட்ட ஏரோதின் தேவாலயம் சாலொமோனின் தேவாலயத்துக்கு (இது நெகெமியாவின் காலத்தில் மறுபடியும் கட்டப்பட்டது) ஒத்ததாயிருந்தது. இதில் ஊழியஞ்செய்த ஆசாரியர்களுக்கும், பிரதான ஆசாரியர்களுக்கும் தேவாலய வரி மூலம் சேகரித்த பணத்திலிருந்து கொடுக்கப்பட்டது.

3. பஸ்கா பண்டிகையின் போது (யாத்திராகமம் 12-ஆம் அதிகாரம்) இஸ்ரவேலர் ஆட்டுக் குட்டியின் இரத்தத்தைத் தங்கள் வீடுகளின் வாசல் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் பூசினார்கள். அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தை நான் கண்டு உங்களைக் கடந்து போவேன் என்று கர்த்தர் கூறியிருந்தார். (தங்களுடைய வீடுகளின் வாசல் சட்டங்களில் இரத்த அடையாளமில்லாத) எகிப்தியர் அனைவரின் முதற்பலன்களும் கொல்லப்பட்டன. ஆதலால், தீவிரமாய் இஸ்ரவேலரைத் தேசத்திலிருந்து அனுப்பி விட எகிப்தியர் அவர்களைத் துரிதப்படுத்தினார்கள். இவ்விதம், எகிப்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் பெற்ற இஸ்ரவேலரின் விடுதலையின் நினைவுகூருதலே பஸ்கா. யாத்திராகமம் 12:24-இல் பஸ்கா நித்திய நியமமாகக் கட்டளையிடப்பட்டது.

4. பெந்தெகொஸ்தே என்பதின் அர்த்தம் "50 நாட்கள்" பஸ்கா பண்டிகைக்குப் பிறகு ஐம்பதாம் நாளில் இது கொண்டாடப்பட்டது. நியாயப்பிரமாணம் அருளப்பட்டதின் ஞாபகார்த்தமாக இது ஆசரிக்கப்பட்டது.

பஸ்கா பண்டிகையிலும், பெந்தெகொஸ்தே பண்டிகையிலும் யூதர்கள், யூத மதம் மாறியவர்கள், தேவபக்தியுள்ளவர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

5. கிறிஸ்துவின் பிறப்பின் சமயத்தில், நித்தியத்தைப் பற்றிய கேள்விகளுக்கும், வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் விடை காணும்படி பல்வேறு வழிகளில் தேடிக்கொண்டிருந்த மக்களைக் கொண்ட பலவிதமான பெரும் மதங்கள் இருந்தன.

புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள்

புதிய ஏற்பாட்டு உலகம், அதாவது அதின் சமயங்கள், கலாச்சாரம், அரசியல் பற்றி நாம் ஓரளவு அறிந்திருக்கிறோம். இனிமேல், மனிதனை மீண்டும் தம்மிடமாகச் சேர்த்துக்கொள்ளும்படி, தேவன் மனிதனாகத் தோன்றிய மாபெரும் அற்புதத்தை விவரிக்கும் புதிய ஏற்பாட்டுக்கு நேராகத்தானே நமது கவனத்தைத் திருப்புவோமாக. கிறிஸ்துவின் மூலம் தேவன் மனிதனோடு செய்த புதிய உடன்படிக்கையை இது அறிவிப்பதால் "புதிய" ஏற்பாடு எனப்படுகிறது. நியாயப்பிரமாணத்தினாலுண்டான தேவநீதியைப் பழைய ஏற்பாடு வெளிப்படுத்தியது. புதிய ஏற்பாடு, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் காணப்படும் கிருபை, சத்தியத்தின் மூலம் உண்டாகும் தேவநீதியை வெளிப்படுத்துகிறது. நாம் இப்பொழுது புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களின் உள்ளடக்கம், ஆக்கியோன்கள், காலக்கணிப்பு முதலானவை பற்றி ஆராய்வோம்.

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் நான்கு அடிப்படை வகையானப் பொருளடக்கங்கள் காணப்படுகின்றன. அவையாவன: வரலாறு, உபதேசம்,தனிப்பட்டவருக்கானவை,தீர்க்கதரிசனம். புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் பொதிந்துள்ள உட்பொருளுக்கேற்ப அவை பிரிக்கப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

உதாரணமாக, மத்தேயு சுவிசேஷத்தில் சில தீர்க்கதரிசனங்கள் உள்ளன. இருப்பினும், இதன் பெரும்பகுதி வரலாறு ஆகும். ஆதலால், மத்தேயு சுவிசேஷம் வரலாற்றுப் பகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் புத்தகங்கள்

கிறிஸ்துவின் ஜீவியத்தைச் சித்தரிக்கும் நான்கு சுவிசேஷங்களும் (மத்தேயு மாற்கு, லூக்கா, யோவான்), சபையின் ஆரம்பத்தைப் பற்றிக் கூறும் (அப்போஸ்தல) நடபடிகளும் வரலாற்றுப் புத்தகங்களின் கீழ் அடங்கும். உண்மைச் சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் பதிவு செய்வது இவற்றின் முதற்கண் நோக்கமாயிருப்பதால் இவை வரலாற்றுப் புத்தகங்கள் என அழைக்கப்படுகின்றன. இதில் சம்பந்தப்பட்ட மனுஷரின் பெயர்களும், இடத்தின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பேசப்பட்ட வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. திட்டவட்டமான செயல்களின் சூழ்நிலைகளும், அவற்றின் விளைவுகளும் அநேக இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக வரலாற்றுப் புத்தகங்கள் இதுபோன்றக் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்கானத் தகவல்களைத் தருகின்றன: என்ன சம்பவித்தது: எங்கே சம்பவித்தது? எப்பொழுது சம்பவித்தது? யார் செய்தார்கள்? என்ன சொல்லப்பட்டது? விளைவு என்ன? புதிய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்கள் இவ்விதக் கேள்விகளுக்கானப் பதிலைக் காட்டிலும் மிகக் கூடுதலான விளக்கங்களை நமக்குத் தருகின்றன. இயேசுவானவரால் சொல்லப் பட்டவைகளும், செய்யப்பட்டவைகளுமான காரியங்கள் எழுதப்பட்டதின் மூலம் தேவன் தம்மைத்தாமே நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

உபதேசப் புத்தகங்கள்

பெரும்பாலும் உபதேசப் புத்தகங்கள் குறிப்பிட்ட விசுவாசிகளாகிய கூட்டத்தாருக்கு எழுதப்பட்ட கடிதங்களாகும். கிறிஸ்தவ வாழ்க்கை முறையைப் பின்பற்றும்படி முயற்சித்த விசுவாசக் கூட்டத்தாரில் சிலருக்கிருந்த குறிப்பிட்ட பிரச்சினைகள் பற்றி இவை கூறுகின்றன. இந்த விசுவாசிகளுக்கு எழுதும் போது, இயேசுகிறிஸ்துவையும், அவர்களுக்கான அவருடைய தியாகப் பணியையும் பற்றிய மாபெரும் சத்தியங்களை ஆக்கியோன்கள் விவரித்திருக்கிறார்கள். கிறிஸ்துவோடு விசுவாசிகளுக்கிருந்த ஐக்கியத்தையும், இதனிமித்தம் இவர்கள் எவ்விதம் ஜீவிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் விளங்கப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் எழுதும்படி தேவனால் அருளப்பட்ட வல்லமை வாய்ந்த தூதுகள், ஆதிவிசுவாசிகளுக்கு மாத்திரமின்றி, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும்" (2கொரிந்தியர் 1:2) உரியதாகும்.

ரோமர், 1,2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1,2 தெசலோனிக்கேயர், எபிரெயர், யாக்கோபு, 1,2 பேதுரு, யூதா, 1 யோவான் முதலானவைகள் வேதாகமத்தின் உபதேசப் புத்தகங்கள் ஆகும்.

தனிப்பட்டவருக்கானப் புத்தகங்கள்

வரலாறு, மற்றும் உபதேசப் புத்தகங்கள் தவிர வேறு சில புத்தகங்கள் உண்டு. அவற்றை, "தனிப்பட்டவருக்கானவை" எனக் கூறலாம். இப்புத்தகங்கள் அநேகருக்கு அல்லாமல் தனிப்பட்ட விசுவாசிகளுக்கு எழுதப்பட்டக் கடிதங்களாகும். அவை, 1,2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், 2,3 யோவான் முதலான ஆறு புத்தகங்களாகும்.

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

இவைகள் சபையில் பொறுப்பாக இருந்தவர்களுக்கு எழுதப்பட்ட படியால் முழு கிறிஸ்தவ சமுதாயத்துக்கும் முக்கியம் வாய்ந்ததாகும். சபைத் தலைவர்களைத் தெரிந்தெடுப்பதற்கான வழிமுறைகளும், சபை விவகாரங்களை நிர்வகிப்பதற்கான அறிவுரைகளும், கடிதம் எழுதப்பட்டவருக்குத் தேவையான தனிப்பட்டப் புத்திமதியும், இதர வேண்டுகோள்களும், அபிப்ராயங்களும் இதில் அடங்கியுள்ளன.

தீர்க்கதரிசனப் புத்தகம்

தீர்க்கதரிசனப் படைப்புகளுக்கு இருபெரும் நோக்கங்கள் உண்டு: 1 ஜனங்களின் நிகழ்கால சூழ்நிலையையும், அதற்கேற்ப அவர்கள் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதையும் பற்றி அவர்களுக்குத் தூது அளித்தல், 2. வருங்கால சம்பவங்களையும், உலகத்திற்கான தேவனுடைய திட்டத்தையும் வெளிப்படுத்துதல். ஏறக்குறைய புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் அனைத்திலும் ஒரு சில தீர்க்கதரிசனம் இடம் பெற்ற போதிலும், வெளிப்படுத்தின விசேஷம் முழுமையான தீர்க்கதரிசனப் புத்தகமாகும்.

வெளிப்படுத்தின விசேஷம் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதப் பட்டது. இச்சபைகள் ஒவ்வொன்றுக்கும் அத்தியாவசியமானத் தூதுகள் கொடுக்கப் பட்டுள்ளன. தேவஜனம், சாத்தான், அவனைப் பின்பற்றுவோர், மற்றும் வானங்கள், பூமி முதலானவற்றின் முடிவான நிலை குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து முற்றிலும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்பதையும் காட்டுகிறது.

இது "அப்போகாலிப்டிக்" (வெளிப்படுத்தல்) எனப்படும். தனித்தன்மை வாய்ந்த தீர்க்கதரிசனம் படைப்பின் ஓர் மாதிரியாகும். இதன் பொருள் யாதெனில், இப்படைப்பில் அடங்கியதூதுகள் எல்லாம் உருவகங்கள், மற்றும் தெளிவான சொல்லோவியம் மூலம் அளிக்கப்படுவதாகும். உதாரணமாக, ஆசியாவிலுள்ள ஏழு சபைகளும் விளக்குத் தண்டுகளாகவும் (1:12,20), சாத்தான் வலுசர்ப்பமாகவும்உருவகப்படுத்திக் கூறப்பட்டுள்ளன.

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் ஆக்கியோன்கள்

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எட்டு (அல்லது ஒன்பது) பேரால் எழுதப்பட்டன. அவர்களின் பெயர்களாவன: மத்தேயு, பேதுரு, யோவான், மாற்கு, யூதா, யாக்கோபு, லூக்கா, பவுல் மற்றும் எபிரெய நிருபக்காரன். (எபிரெய நிருபத்தைப் பவுல் எழுதினார் என வேதவல்லுநர்களில் சிலர் நம்புகின்றனர்). லூக்கா தவிர மற்றவர்கள் எல்லாரும் யூதர்களாயிருந்தார்கள். மத்தேயு, பேதுரு, யோவான் ஆகியோர் இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களுக்குட்பட்டவராயிருந்தார்கள். மாற்கு, யூதா, யாக்கோபு ஆகியோர் சீஷர்களுடன் தொடர்புடையவர்களும், ஆதிச் சபையில் அங்கம் வகித்தவர்களுமாயிருந்தார்கள். இயேசுவின் பூவுலக வாழ்க்கையையும், ஊழியத்தையும் நேரில் கண்டவர்களை லூக்காவும், பவுலும் அறிந்திருந்தார்கள்.

புதிய ஏற்பாட்டின் புத்தகங்களும் அவற்றின் ஆக்கியோன்களும்

ஆக்கியோன்	புத்தகம்	ஆக்கியோன்	புத்தகம்
மத்தேயு	மத்தேயு	பேதுரு	1,2 பேதுரு
மாற்கு	மாற்கு		
லூக்கா	லூக்கா	பவுல்	ரோமர்
அப்போஸ்தலர் நடபடிகள்			1,2 கொரிந்தியர்
யோவான்	யோவான்		கலாத்தியர்
	1,2,3 யோவான்		எபேசியர்
	வெளிப்படுத்தின விசேஷம்		பிலிப்பியர்
யாக்கோபு	யாக்கோபு		கொலொசேயர்
யூதா	யூதா		1,2 தெசலோனிக்கேயர்
			1,2 தீமோத்தேயு
			தீத்து
			பிலேமோன்
			[எபிரெயர்]

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் காலக்கணிப்பு

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் அவற்றின் பொருளடக்கத்திற்கு ஏற்ப பிரிக்கப்படுகின்றன: முதலாவது வரலாற்றுப் புத்தகங்கள், அடுத்தது உபதேசப் புத்தகங்களும், தனிப் பட்டவர்களுக்கானப் புத்தகங்களும், கடைசியில் தீர்க்கதரிசனப் புத்தகங்கள் ஆகும். இருப்பினும் கற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக, நாங்கள் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை அவற்றின் "காலக்கணிப்பு" வரிசையில் வகைப் படுத்தியிருக்கிறோம். இதனால் இப்புத்தகங்களின் சம்பவங்கள் உண்மையில் சரித்திரபூர்வமாக நடைபெற்றதை விளங்கிக் கொள்ளப் பெரிதும் உதவும்.

புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ள வரலாற்று சம்பவங்கள் அனைத்தும், கி.மு. 6 முதல் கி.பி. 95 வரையுள்ள சுமார் நூறு வருடக் காலக் கட்டத்தில் நிகழ்ந்தவைகளாகும். இதனை மூன்று காலங்களாகப் பகுக்கலாம். (1) இயேசுவின் ஜீவியமும், ஊழியமும் (2) சபையின் ஆரம்பமும், வளர்ச்சியும் (3) சபையின் முன்னேற்றமும், உபத்திரவமும்.

1. இயேசுவின் ஜீவியமும், ஊழியமும்: கி.மு. 6-கி.பி. 29

மத்தேயு

மாற்கு

லூக்கா

யோவான்

2. சபையின் ஆரம்பமும், வளர்ச்சியும்: கி.மு. 30-கி.பி. 60

அப்போஸ்தலர் நடபடிகள்	ரோமர்
யாக்கோபு	கொலோசேயர், எபேசியர்
கலாத்தியர்	பிலேமோன்
1,2 தெசலோனிக்கேயர்	பிலிப்பியர்
1,2 கொரிந்தியர்	

3. சபையின் முன்னேற்றமும், உபத்திரவமும்: கி.மு. 60-கி.பி. 95

1தீமோத்தேயு	எபிரெயர்
தீத்து	யூதா
1பேதுரு	1,2,3 யோவான்
2 தீமோத்தேயு	வெளிப்படுத்துதல்
2பேதுரு	

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் நான்கு அடிப்படை வகையான பொருளடக்கங்கள் பொதிந்துள்ளன. அவையாவன: வரலாறு, உபதேசம், தனிப்பட்டவருக்குரியவை, தீர்க்கதரிசனம். இந்நான்குவிதப் புத்தகங்கள் ஒவ்வொன்றின் மூலக்கூறுகளாவன:-

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

அ. வரலாறு: வரலாற்றில் குறிப்பிட்டக் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிட்ட சம்பவங்களையும், உண்மைகளையும் முக்கியமாகக் கொண்டுள்ளது.

ஆ. உபதேசம்: கிறிஸ்துவையும், கிறிஸ்தவ ஜீவியத்தையும் குறித்த சத்தியங்களை முக்கியமாகக் கொண்டுள்ளது.

இ. தனிப்பட்டவருக்குரியது: சபைத் தலைமை, மற்றும் தனிப்பட்டவரின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய இதர விஷயங்களைப் பற்றித் தனிப்பட்டவருக்கு அளிக்கும் அறிவுரைகளை முக்கியமாகக் கொண்டுள்ளது.

ஈ. தீர்க்கதரிசனம்: நிகழ்காலத்தையும், வருங்கால வெளிப்படுத்துதல்களைப் பற்றிய செய்திகளையும் முக்கியமாகக் கொண்டுள்ளது.

2. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் அவற்றின் வரலாற்று வகைக்கும், காலத்துக்கும் உட்பட்டவைகளாகும் (புத்தகங்களை ஒவ்வொரு பிரிவிலும் எந்த வரிசையிலும் எழுதலாம்):

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

காலம்	வரலாறு	உபதேசம்	தனிப்பட்டவை	தீர்க்கதரிசனம்
கி. மு. 6.-	மத்தேயு			
கி. பி. 29	மாற்கு			
	லூக்கா			
	யோவான்			
கி. பி. 30-	அப்போஸ்தலர் நடபடிகள்	ரோமர்	பிலேமோன்	
கி. பி. 60		1,2 கொரிந்தியர் கலாத்தியர் எபேசியர் பிலிப்பியர் கொலொசெயர் 1,2 தெசலோனிக்கேயர் யாக்கோபு		
கி. பி. 60-		1,2 பேதுரு	1,2 தீமோத்தேயு	வெளிப்படுத்தின விசேஷம்
கி. பி. 95		எபிரெயர்	தீத்து	
		யூதா 1யோவான்	2,3 யோவான்	

புதிய ஏற்பாட்டின் பின்னணியம்

3. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் ஆக்கியோன்கள் பின்வருமாறு:

அ. மத்தேயு எழுதியது மத்தேயு சுவிசேஷம்

ஆ. மாற்கு எழுதியது மாற்கு சுவிசேஷம்.

இ. லூக்கா எழுதியவை லூக்கா சுவிசேஷம், அப்போஸ்தலர் நடபடிகள்.

ஈ. யோவான் எழுதியவை யோவான் சுவிசேஷம், 1,2,3 யோவான், வெளிப்படுத்தின விசேஷம்.

உ. யாக்கோபு எழுதியது யாக்கோபு நிருபம்.

ஊ. யூதா எழுதியது யூதா நிருபம்.

எ. பேதுரு எழுதியவை 1,2 பேதுரு நிருபம்.

ஏ. பவுல் ஒருவேளை எபிரெயர் நிருபம் எழுதியிருக்கலாம்.

ஐ. பவுல் எழுதியவை: ரோமர், 1,2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1,2 தெசலோனிக்கேயர், 1,2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன்.

4. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள். எழுதியவர்களில் அநேகர், இயேசு பூவுலகில் ஊழியஞ் செய்த போது அவருடைய சீஷர்களாக இருந்தவர்களாவர்.

புதிய ஏற்பாட்டின் மற்ற ஆக்கியோன்கள் இந்த சீஷர்களை அறிந்தவர்களும், அநேகந் தடவைகளில் இவர்களோடு தொடர்புடையவர்களு மாயிருந்தார்கள். இவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டும், ஆவியால் ஏவப்பட்டும் இவற்றை எழுதினார்கள். ஆதலால், புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் இயேசுவின் போதனைகளும், பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்டவைகளுமாயிருக்கின்றன.

இயேசு கிறிஸ்து

சுவிசேஷங்கள்

சுவிசேஷங்கள் இயேசுவின் ஜீவியத்தைச் சித்தரிக்கும் அழகுறு பெட்டகங்களாகும். இதில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களும், இடத்தின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன, இயேசுவின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட குறிப்பிடத்தக்க சம்பவங்களும், அவருடைய போதனைகளும் நிறைந்துள்ளன.

சுவிசேஷத்தைத் தெள்ளந்தெளிவுற விளங்கிக் கொள்வதற்கு இந்தப் பகுதி நமக்கு உதவி செய்யும். நாம் இதற்கு முந்திய பகுதியில் புதிய ஏற்பாட்டு உலகம், புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் உள்ளடக்கம் பற்றிய அநேக உண்மைகளைத் தெரிந்து கொண்டோம். இந்தப் பகுதியில் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களையும் உன்னித்துக் கவனிக்கலாம். இயேசுவின் சரிதையை எடுத்தியம்புவதில் இந்நான்கு புத்தகங்களும் எவ்விதம் ஒத்திருக்கின்றன என்பதையும் அவை எவ்விதம் வேறுபடுகின்றன என்பதையும் நாம் கற்றுக் கொள்ளலாம். இயேசு வாழ்ந்த தேசம், அவர் ஊழியஞ் செய்த இடம் பற்றியும் கற்றுக் கொள்ளலாம். அவருடைய போதனைகளில் சிலவற்றையும், அவர் போதித்த விதத்தைப் பற்றியுங் கூட நாம் அறிந்து கொள்ளலாம்.

நாம் சுவிசேஷ நூல்களைப் படிப்பதினால் சுவிசேஷச் செய்தியின் சிறப்பு அம்சங்களைப் புரிந்து கொள்ள முடியும். மேலும், புதிய ஏற்பாட்டின் மற்ற புஸ்தகங்களைத் தனித்தனியாகப் படிப்பதற்கும் இது நம்மை ஆயத்தப்படுத்தும்.

நான்கு சுவிசேஷத்தின் விவரங்கள்

தேவனுடைய அநந்த ஞானத்தினால் ஒன்றுக்கு மாறாக, இயேசுவின் ஜீவியத்தைச் சித்தரிக்கும் நான்கு விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அநேகர் இவ்விதம் கேட்பதுண்டு: "ஏன் கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பற்றிய விவரம் ஒன்றுக்கு மேற்பட்டவை உள்ளன?"

நான்கு சுவிசேஷ விவரங்கள் இருப்பதினால் நன்மைகள்

இரு பெரும் நன்மைகள் உள்ளன. முதலாவது, பல்வேறு வகையான விவரங்கள், பலதரப்பட்ட மக்களின் கவனத்தைக் கவருகின்றன. ஒவ்வொரு சுவிசேஷமும் வித்தியாசமான மக்களின் உள்ளத்தை ஈர்க்கக் கூடியத் தனித்தன்மையைப் பெற்றுள்ளது. உதாரணமாக, கிறிஸ்துவின் ஜீவியத்தில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் நிறைவேறியதை மத்தேயு சுவிசேஷம் வலியுறுத்துகிறது. இவ்வுண்மை யூதர்களுக்குப் பொருள் பொதிந்ததாக உள்ளது. இயேசுவின் ஆற்றல் மிக்க ஊழியத்தை மாற்கு சுவிசேஷம் படம் பிடித்துக் காண்பிக்கிறது. ரோமர் வாசகர்கள் விரும்பும் விதத்தில் விவரங்கள் சேர்க்கப் பட்டுள்ளன.

கிறிஸ்துவின் இரட்சிப்பின் ஊழியத்தில் ஆழ்ந்த அறிவுடைய புறஜாதியாரைக் கருத்திற் கொண்டு லூக்கா சுவிசேஷம் எழுதப்பட்டுள்ளது. ஊழியத்தின் முன்னேற்றத்தைப் பற்றி லூக்கா எடுத்தியம்புவதை புறஜாதிகள் புரிந்து கொள்ளக்கூடும். வாழ்க்கையின் அர்த்தம், வரலாறு, நித்தியம் ஆகியவை பற்றிய பெரும் வினாக்களுக்கு விடை எதிர் நோக்கியிருக்கும் ஆழ்ந்த சிந்தை கொண்ட மக்கள் கிறிஸ்துவை நித்திய வார்த்தையாக யோவான் வெளிப்படுத்துவதை அறிந்து கொள்வார்கள்.

இயேசு கிறிஸ்து

சுவிசேஷங்கள் எழுதப்பட்டது முதல், ஒவ்வொரு சூழ்நிலையில், வாழ்க்கை நிலைமையில், தேசத்தில் உள்ள ஆண்கள், பெண்களால் அவை கவரப்பட்டுள்ளன.

இரண்டாவது, கூடுதலான விவரங்கள் இருப்பதால், இயேசுவின் ஜீவியத்திலுள்ள முக்கியமான சம்பவங்களைக் கூடுதலாகத் தெரிந்து கொள்வது தெளிவு. ஒவ்வொரு ஆசிரியரும் மற்ற சுவிசேஷத்தில் இடம்பெறாத சில விவரங்களையும், தகவல்களையும் கூடுதலாகச் சேர்த்திருக்கிறார்கள். இருப்பினும், இயேசுவின் ஜீவியம், ஊழியம், பாவிகளுக்காக அவர் மரணத்தை ஏற்றது, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது போன்ற ஒட்டு மொத்த விவரங்கள் எல்லா சுவிசேஷத்திலும் விவரிக்கப் பட்டுள்ளன. இவ்விதமாக, கிறிஸ்துவைப் பற்றிய கருப்பொருள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நான்கு பிரதான ஓவியர்களைப் போன்று, சுவிசேஷத்தின் ஆக்கியோன்கள் தேவகுமாரனின் வாழ்க்கையைச் சித்தரித்துள்ளனர். ஒவ்வொருவரும் இயேசுவை வித்தியாசமான விதத்தில் வெளிப்படுத்திய போதிலும், எல்லாவற்றிலும் இயேசுவின் இணையற்ற சாயலை அடையாளங் கண்டுகொள்வது நிச்சயமே.

நான்கு சுவிசேஷ விவரங்களின் முக்கியமானத் தனிச் சிறப்புகள்

சுவிசேஷ விவரங்கள் "தேர்ந்தெடுக்கப் பட்டவையே". இவை, இயேசு சொன்னதும், செய்ததுமான எல்லாவற்றையும் விவரிப்பதில்லை. யோவான் குறிப்பிடுவது போல, "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" (யோவான் 21:25). ஒவ்வொரு ஆசிரியரும் தங்களுடைய புத்தகத்தில் சேர்ப்பதற்காக, எண்ணிலடங்கா சம்பவங்களிலிருந்து குறிப்பிட்டவைகளை மட்டும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக் கேற்பத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

உதாரணமாக, இயேசுவின் இளமை மற்றும் வாலிபப் பருவம் பற்றி லூக்காவிலுள்ள (2:40-52) பதின்மூன்று வசனங்கள் தவிர வேறொன்றும் இடம்பெறவில்லை. மறுபக்கத்தில், பாடுகளின் வாரம் ஆக்கியோன்கள் நால்வராலும் மிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் எழுதியவைகளில் பல பொதுப் படையானவை. இருப்பினும், இம்மூவராலும் விடுபட்ட அநேகம் விஷயங்களை யோவான் சேர்த்திருக்கிறார். இவ்வுண்மைகள் அனைத்தும் சுவிசேஷ விவரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவை என்பதை மெய்ப்பிக்கின்றன.

மேலும், சுவிசேஷ விவரங்கள் "ஒத்திசைவு உடையவை". ஆக்கியோன்கள் ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்தில் பதிந்த விஷயங்களைத் தேர்ந்தெடுத்தபோதிலும், வரலாற்றின் பிரதான சம்பவங்களை விரிந்துரைப்பதில் அவர்கள் அனைவரும் ஒரேவிதமான அடிப்படை அமைப்பையே பின்பற்றியுள்ளனர். இயேசுவானவர் தமது பகிரங்க ஊழியத்துக்கு யோவான் ஸ்நானனால் அறிமுகப்படுத்தப்படுகிறார். அதன்பின், அற்புதங்கள்; போதனைகள்; சீஷர்கள், ஜனங்கள் மற்றும் யூதத் தலைவர்களோடுள்ள இயேசுவின் சந்திப்புகள் ஆகியவை இடம்பெறுகின்றன. விவரிக்கப்பட்டவைகளில் பெரும்பான்மையான சம்பவங்கள் கலிலேயாவில் அல்லது எருசலேமில் நடைபெற்றுள்ளன. இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களுக்கும், அவரைப் புறக்கணித்தவர்களுக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

இயேசு கிறிஸ்து

இறுதியில், எருசலேமுக்குள் இயேசுவானவரின் வெற்றிப் பிரவேசம், கைது செய்யப்பட்டது, நியாயவிசாரணை, சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை சித்திரிக்கப் பட்டுள்ளன. சுவிசேஷங்கள் அனைத்திலும் இயேசுவின் ஜீவியத்தில் நிறைவேறிய பல்வேறு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. மிகத் துல்லியமாக நாம் உற்று நோக்குங்கால், பாவிகளை இரட்சிக்கும்படி வந்த தேவகுமாரனைப் பற்றிய நற்செய்தியின் சரிதையை விளக்குவது "நான்கு" சுவிசேஷங்கள் அல்ல, "ஒரே" சுவிசேஷமே என்பது கண்கூடு.

இயேசு வாழ்ந்த இடங்களும், ஊழியஞ் செய்த இடங்களும்

சுவிசேஷ விவரங்களின் பிரதான அம்சங்களில் சிலவற்றை நாம் கற்றுக் கொண்டோம். இயேசுவின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவைகளாகிய யூதேயா, கலிலேயா, நாசரேத்து, கப்பர்நகூம், எருசலேம் போன்ற அநேக இடப்பெயர்களை நாம் சுவிசேஷங்களில் காண்கிறோம். இந்த இடங்கள் அமைந்துள்ள பலஸ்தீனா நாட்டின் நிருவாகப் பிரிவுகளைப் பற்றி இப்பகுதியில் நாம் கற்கலாம். மேலும், பலஸ்தீனா நாட்டின் புவியியல் அமைப்புகள் குறித்தும் நாம் படிக்கலாம்.

பாலஸ்தீனா நாடும், நிருவாகப் பிரிவுகளும்

தேசப்படத்தில் "பாலஸ்தீனா" எனும் முழு நிலப்பரப்பைக் காணலாம். இந்த நாட்டில்தான் இயேசு வாழ்ந்தார். தேசப்படத்தைப் பார்த்து, வெவ்வேறு வகையான நிலப்பரப்பைக் கவனியுங்கள்.

1. கடற்கரைப் பிரதேசம் - வடக்கு சீதோன் முதல் தெற்கு காசா வரை விரிந்துள்ளது, 2. மத்திய மலைப் பிரதேசம் - வடக்கில் தாண், காதேஸ் முதல் தெற்கில் பெயெர்செபா வரை பரவியுள்ளது, 3. யோர்தான் பள்ளத்தாக்கு - வடக்குக் கலிலேயாக் கடல் துவங்கி, தெற்கே சாவுக் கடல் வரை விரிவடைந்துள்ளது. 4. கிழக்குப் பீடபூமி - யோர்தானுக்குக் கிழக்குப் பக்கத்திலுள்ள பீடபூமி.

யோர்தானின் மேற்குப் பக்கத்திலிருந்த கலிலேயா, சமாரியா, யூதேயா பட்டணங்களிலும், யோர்தானின் கிழக்குப் பக்கத்திலிருந்த தெக்கப்போலி, பெராயா பட்டணங்களிலும் இயேசு வாழ்ந்து, ஊழியஞ் செய்து வந்தார். சீரோபேனிக்கியாவிலிருந்து தீரு, சீதோன் பட்டணங்களுக்கும் அவர் சென்றார். மேலே கூறப்பட்டுள்ள பட்டணம் அல்லது நகர்ப்பிரிவு ஒவ்வொன்றையும் உலகப் படத்திலிருந்து கண்டு பிடிப்பதற்கு சில நிமிடங்களைச் செலவழிப்பது உங்களுக்கு நன்மை பயக்கும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பலஸ்தீனா நாட்டில் அநேகப் பட்டணங்கள் இருந்தன. இப்பட்டணங்கள் அனைத்தும் ரோம அரசாங்கத்தின் முழு பரிபாலனத்தின் கீழ் இருந்தன.

கலிலேயா

கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்து என்னும் ஊரில் இயேசு வளர்ந்து வந்தார் (மத்தேயு 2:23,23; லூக்கா 2:51). அவர் தமது முதலாம் அற்புதத்தைக் கானா ஊரிலே நடப்பித்தார். அதன்பின் அவர் நாசரேத்தை விட்டு, கப்பர்நகூமில் வாசம் பண்ணினார். சீரோபேனிக்கியா, தெக்கப்போலி ஆகிய புறஜாதியாரின் பட்டணங்களுக்கு அருகில் கலிலேயா இருந்தபடியால், இதரப் பட்டணங்களில் வாழ்ந்த கண்டிப்பான யூதர்கள் கலிலேயர்களை இழிவுடன் நோக்கினார்கள்.

இயேசு கிறிஸ்து

இருப்பினும், கலிலேயர் தங்களுடைய விசுவாசத்திற்கென்று அர்ப்பணிக்கப் பட்டவர்களும், யூதரின் தேசத்துக்கு விசுவாசம் உள்ளனர்களுமாயிருந்தார்கள். இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களில் பதினொரு பேர் கலிலேயாவிலிருந்து வந்தவர்களே. இந்நாட்டிலுள்ள பட்டணங்கள், கிராமங்கள், மலைப்பகுதிகள் ஆகியவற்றில் இயேசு தமது ஊழியத்தின் பெரும்பகுதியைச் செலவழித்தார்.

தெக்கப்போலி

வடகிழக்கு கலிலேயாவின் நிருவாகப் பிரிவுகள் தெக்கப்போலி, பாஷான் ஆகும். மகா அலெக்சாண்டரின் ஆதரவாளர்களால் நிறுவப்பட்டக் கிரேக்க நகரங்களின் சங்கமே தெக்கப்போலி (தெக்கப்போலியின் பொருள் "பத்து நகரங்கள்"). இயேசு இந்தப் பகுதிகளுக்குச் சென்றார் (மாற்கு 7:31-35). கதரேனர் (கெர்கெசேனர் அல்லது கெரசேனர் என்றும் அழைக்கப்படும்) நாட்டில் ஊழியஞ்செய்தார். இங்கே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனை இவர் குணமாக்கினார் (மாற்கு 5:1-20; லூக்கா 8:26-39). இவர் பிலிப்புச் செசரியா பட்டணங்களுக்கும் சென்றார் (மத்தேயு 16:13-20).

சமாரியா

சமாரியாவின் கடற்கரைப் பகுதியிலிருந்தவர்கள் புறஜாதிகளாக இருந்தபோதிலும் மலைப் பகுதியிலிருந்த ஜனங்கள் கலப்பு இனத்தவர்களாயிருந்தார்கள். இவர்கள், புறஜாதியாருடன் கலப்பு விவாகம் செய்திருந்த இஸ்ரவேலின் வடராஜ்யத்திலிருந்த பத்து ஜாதிகளின் சந்ததியார் ஆவர்.

இவர்கள் கெரிசீம் மலையில் தங்களுடைய சொந்த ஆலயத்தைக் கட்டியிருந்தார்கள். இது இயேசுவின் காலத்தில் காணப்படவில்லை. இருப்பினும் ஆலயம் இருந்த இடம் புனிதமாகக் கருதப்பட்டு வந்தது. இதன் காரணமாக, யூதர்களில் அநேகர் சமாரியாவின் வழியாகப் பிரயாணஞ் செய்வதில்லை. இருப்பினும், இயேசு இந்தப் பட்டணத்தின் ஜனங்களுக்கு அநேகந் தடவைகள் ஊழியஞ்செய்திருக்கிறார். சீகார் கிணற்றண்டையில் சமாரிய ஸ்திரீயோடு அவர் உரையாடியதில், யூதருக்கும் சாரியருக்குமிருந்த முரண்பாட்டை, சம்பாஷணையின் முக்கிய விஷயமாகப் பெரிதுபடுத்தவில்லை. இதற்கு மாறாக, மேசியாவாகத் தம்மை வெளிப்படுத்துவதில் கவனத்தைச் செலுத்தினார்.

பெரேயா

பெரேயாவில் குடியிருந்தவர்களில் அநேகர் யூதர். புதிய ஏற்பாட்டில் சில இடங்களில், "யோர்தானுக்கு அக்கரையான தேசம்" எனக் குறிப்பிடப்படுவது பெரேயா பட்டணமே. இயேசு கடைசியாக எருசலேமுக்குச் சென்றபொழுது, இப்பட்டணத்தின் வழியாகப் பிரயாணஞ் செய்து, கிராமங்களிலும், ஊர்களிலும் போதித்தார் (மாற்கு 10:1-45; மத்தேயு 19:1-20:28).

யூதேயா

இயேசுவின் பிறப்பிடமாகிய பெத்லேகம் ஊரும், இயேசுவின் ஜீவியத்தில் பல முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்த எருசலேம் பட்டணமும் யூதேயா தேசத்தில் உள்ளன. மரியாள், மார்த்தாள், லாசரு (இயேசுவினால் மீண்டும் உயிர் பெற்றவன்-யோவான் 11:1; 32-44) ஆகியோர் வாழ்ந்த பெத்தானியா, எருசலேமுக்கு அருகிலிருந்தது. சில கல் தொலைவில் எரிகோ இருந்தது. இங்கே இயேசு ஒரு குருடனைக் குணமாக்கினார் (மாற்கு 10:46-52).

இயேசு கிறிஸ்து

இயேசுவின் ஊழிய நாட்களில், எருசலேமுக்கும், அருகிலிருந்த ஊர்களுக்கும் அநேகந்தரம் பிரயாணஞ் செய்திருக்கிறார். ஆண்டுதோறும் எருசலேமில் கொண்டாடப்பட்ட யூதரின் பண்டிகைகளுக்கும் அவர் அநேகந் தடவை சென்றிருக்கிறார். மேலும், இங்குதான் இவர் நியாயம் விசாரிக்கப்பட்டு, சிலுவையிலறையப் பட்டு, அடக்கம் பண்ணப்பட்டார் (லூக்கா 22,23 அதிகாரம்). அவர் உயிர்த்தெழுந்த பிறகு, எருசலேமுக்கு ஏழு மைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குச் சென்ற இரண்டு சீஷர்களுக்குத் தரிசனமானார் (லூக்கா 24:13-27). இயேசு எருசலேமிலிருந்து பெத்தானியாவுக்குப் போய்க் கொண்டிருக்கையில், தமது சீஷர்களின் எதிர்கால ஊழியத்தைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்தார். இயேசு வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டப் பரிசுத்த ஆவியைப்பெறக் காத்திருக்கும்படி சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்பினார்கள் (லூக்கா 24:36-53).

முக்கியத் தகவலின் மறுபார்வை

1. பல்வேறு வகையான சுவிசேஷ விவரங்கள், பலதரப்பட்ட மக்களின் கவனத்தைக் கவரக் கூடியதாக உள்ளது. மேலும், இவை இயேசுவின் ஜீவியத்திலுள்ள பிரதான சம்பவங்களைக் கூடுதலாக வலியுறுத்துகின்றன.

2. இயேசு செய்ததும், சொன்னதுமான எல்லாம் இதில் இடம்பெறாததால், சுவிசேஷ விவரங்கள் 'தேர்ந்தெடுக்கப்பட்டவையே' மேலும் இவை 'ஒத்திசைவு' உடையவை, ஏனெனில், வரலாற்றை விளக்குவதில் இவை அனைத்தும் ஒரே மாதிரியான அடிப்படை அமைப்புடையவை.

3. பாலஸ்தீனா தனித்தன்மை வாய்ந்த நான்கு வித்தியாசமான நிலப்பரப்புகளைக் கொண்டது. அவையாவன: 'கடற்கரைப் பிரதேசம்,' 'மத்திய மலைப்பிரதேசம்,' 'யோர்தான் பள்ளத்தாக்கு,' 'கிழக்குப் பீடபூமி'.

4. யோர்தானுக்கு மேற்புறத்திலிருந்த கலிலேயா, சமாரியா, யூதேயா நாடுகளிலும், யோர்தான் நதிக்குக் கீழ்ப்புறத்திலிருந்த தெக்கப்போலி, பெரேயா நாடுகளிலும் இயேசு வாழ்ந்து, ஊழியஞ் செய்து வந்தார். சீரோபேனிக்காவிலிருந்த தீரு, சீதோன் பட்டணங்களிலும் அவர் ஊழியஞ் செய்தார்.

அ. இயேசு வளர்ந்த ஊரான நாசரேத்து கலிலியா நாட்டில் உள்ளது. பன்னிரெண்டு சீஷர்களில் பதினொரு பேர் கலிலேயாவைச் சார்ந்தவர்கள்.

ஆ. கலிலேயாவுக்கு வடக்கே உள்ள சீரபேனிக்கியா கடற்கரைப் பிரதேசமாகும்.

இ. தெக்கப்போலி அநேகக் கிரேக்கப் பட்டணங்களின் சங்கமாகும்.

ஈ. யூதரும், கிரேக்கருமாகிய கலப்பு ஜாதி வாழுமிடம் சமாரியா. இந்நாட்டில் கெரிசீம் மலை உள்ளது.

உ. 'யோர்தானுக்கு அக்கரையான தேசம்' எனப் பெரேயா குறிப்பிடப்படுகிறது.

ஊ. இயேசு பிறந்த இடம் யூதேயா. இந்நாட்டில்தான் எருசலேம் உள்ளது.

இயேசு கிறிஸ்து

இயேசுவின் ஜீவியத்தில் நிகழ்ந்த சம்பவங்கள்

இயேசுவின் ஜீவியத்தில் நடந்த சம்பவங்களை நான்கு பெரிய காலங்களாகப் பிரிக்கலாம். அவை:

1) அவருடைய பிறப்பும், ஊழியத்திற்கான ஆயத்தமும்,

2) அவருடைய ஆரம்ப ஊழியமும், கீர்த்தியும்,

3) அவருடைய பிந்திய ஊழியமும், எதிர்ப்பும்,

4) அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல்.

முக்கியமான இந்நான்கு காலங்களும் ஒவ்வொரு சுவிசேஷத்திலும் அதே வரிசையில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் ஆக்கியோன்கள், ஒவ்வொரு காலத்திற்கும் உட்பட்டக் குறிப்பிட்ட சம்பவங்களைத் தங்களது சொந்த நோக்கங்களுக்கேற்ப ஒழுங்கு படுத்தியுள்ளனர். காலவரிசைப்படி விவரங்களைக் கொடுப்பதைக் காட்டிலும், இயேசுவை மிகத்துல்லியமாக வெளிப் படுத்துவதையே அவர்கள் முதற்கண் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். கீழ்க்கண்டுள்ள அட்டவணை கிறிஸ்துவின் ஜீவியத்தின் முக்கியமானக் காலங்கள் மற்றும் சம்பவங்களின் சுருக்கமாகும். அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ள முக்கியக் காலங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்டக் குறிப்பிட்ட சம்பவங்களை, தொடர்ந்து வரும் பாடங்களில் நாம் காண்போம்.

இயேசுவின் போதனை

வெவ்வேறு சுவிசேஷங்களின் தனித்தன்மைகளையும், இயேசு வாழ்ந்ததும், ஜீவித்ததுமான நாட்டையும், இயேசுவின் ஜீவியத்திலுள்ள முக்கிய சம்பவங்களையும் பற்றி நாம் ஆராய்ந்தோம். இப்பொழுது, சுவிசேஷங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவருடைய போதனையின் விவரங்களை நாம் சற்று கூடுதலாக உற்று நோக்குவோம். இயேசுவின் அருட்பணிகளின் ஏற்றம் மிகு அம்சங்களிலொன்று போதனையே. தரித்திரருக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதும், முழுமனுக்குலத்துக்கும் தேவனைப் பற்றிய சத்தியத்தை வெளிப்படுத்துவதும் அவருடைய ஊழியமாயிருந்தது. பெரும்பாலும் சுவிசேஷங்களின் ஒவ்வொரு பக்கத்திலும் எச்சரிப்புகள், அறிவிப்புகள், புத்திமதிகள், விளக்கங்கள் முதலானவை பொதிந்துள்ளன. அவரது போதனையின் முக்கியமான ஐந்து அம்சங்களை மட்டும் நாம் கவனிப்போம். அவையாவன: அடிப்படை, நோக்கம், வழிமுறை, பொருளடக்கம், விளைவு.

அடிப்படை

இயேசுவின் போதனை தேவனுடைய வார்த்தையாகிய பழைய ஏற்பாட்டையும், தேவனுடைய ஒரேபேறான குமாரனாகியத் தம்மையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர் பழைய ஏற்பாட்டுக் கருவூலத்திலிருந்து எடுத்து, அவற்றின் உண்மைப் பொருளை விளங்கப் பண்ணுவதற்கு முற்றிலும் அதிகாரம் உடையவராகத் தம்மைத்தாமே வெளிப்படுத்தினார்.

இயேசுவின் ஜீவியம்

முக்கியக் காலங்களும் சம்பவங்களும்	சுவிசேஷக் குறிப்புகள்
1. பிறப்பும், ஊழியத்திற்கான ஆயத்தமும்	மத்தேயு 1:1-4:11
- பிறப்பும், வளர்ச்சியும்	மாற்கு 1:1-13
- அறிமுகம், ஞானஸ்நானம், சோதனை	லூக்கா1:1-4:13, யோவான்1:1-51
2. ஆரம்ப ஊழியமும், கீர்த்தியும்	மத்தேயு 4:12-15:20
- கலிலேயாவில் ஊழியம்	மாற்கு 1:14-7:23
- யூதேயாவில் ஊழியம்	லூக்கா 4:14-9:17
- கலிலேயாவுக்குத் திரும்புதல்	யோவான் 2:1-6:71
- கீர்த்தியின் உச்சி	
3. பிந்திய ஊழியமும், எதிர்ப்பும்	மத்தேயு 15:21-20:34
- வடக்கிலிருந்து விலகிச் செல்லுதல்	மாற்கு 7:24-10:52
- கலிலேயாவில் மீண்டும் ஊழியம்	லூக்கா 9:18-19:28
- யூதேயாவில் மீண்டும் ஊழியம்	யோவான் 7:1-12:11
- பெரேயாவில் ஊழியம்	
- எருசலேமுக்குக் கடைசிப் பயணம்	
4. மரணம், உயிர்ந்தெழுதல், பரமேறுதல்	மத்தேயு 21:1-28:20
- வெற்றிப் பிரவேசம், கைதாகுதல், சிலுவை மரணம், அடக்கம்	மாற்கு 11:1-16:20
- உயிர்த்தெழுதல், சீஷர்களுக்குக் கட்டளை, பரமேறுதல்	லூக்கா 19:29-24:53 யோவான் 12:12-21:25

இயேசு கிறிஸ்து

இயேசு, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள், சம்பவங்களுடன் தம்மை சம்பந்தப்படுத்திப் பேசினார். ஏசாயாவின் தீர்க்கதரிசங்களிலிருந்து அவர் வாசித்த பொழுது, தமது இறைப்பணி இன்னதென்று சுட்டிக் காட்டினார் (லூக்கா 4:18). நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதற்கே தாம் வந்ததாக அவர் தெளிவுபடுத்தினார் (மத்தேயு 5:17-20). அவர் நிக்கொதேமுவிடம் பேசியபொழுது, வனாந்தரத்தில் இஸ்ரவேலருக்குண்டான ஓர் அனுபவத்துடன் சம்பந்தப்படுத்தித் தமது கல்வாரி மரணத்தைப் பற்றிக் கூறினார் (யோவான் 3:14; மேலும் எண் 21:8,9). ஓர் அடையாளத்தை அவர்களுக்குக் கொடுத்தார். இந்த அடையாளத்தின் பொருள், அவர் மரித்து மூன்று நாளைக்குப் பிறகு உயிரோடு எழும்புவார் என்பதே (மத்தேயு 12:39,40). இயேசு உயிர்த்தெழுந்தப் பின்பு எம்மாவு கிராமத்துக்குச் சென்ற இரண்டு சீஷர்களைச் சந்தித்தார். அவர்கள் நடந்து செல்கையில், "வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை" அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் (லூக்கா 24:27).

பழைய ஏற்பாடு வேதங்களின் மீது தமக்கு ஒப்பற்ற அதிகாரம் உண்டென்றும் இயேசு மெய்ப்பித்துக் காட்டினார். "மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" என்று அவர் கூறினார் (மாற்கு 2:28). யாத்திராகமம் 31:15-இன்படி, ஓய்வுநாளில் எந்தவொரு வேலையும் செய்யப்படக் கூடாது. இருப்பினும் இயேசு, தாமும், தமது பிதாவும் தொடர்ந்து ஓய்வுநாளிலும் கூட கிரியை செய்து வருவதாகக் கூறினார் (யோவான் 5:16,17). அவர் ஓய்வுநாளில் குணமாக்கி, இவ்விதம் செய்வது நியாயமானதே என்றும் போதித்தார் (லூக்கா 13:10-17).

பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப் பட்டதைக் காட்டிலும் உயரிய பூரண சற்குணத்தின் அளவையும் இயேசு அறிமுகம் செய்தார் (மத்தேயு 5-7 அதிகாரம்).

நோக்கம்

ஒன்றான மெய்த்தேவனை மனுக்குலத்துக்கு வெளிப்படுத்துவதும், மனுஷர் தங்கள் ஜீவியத்தைக் கட்டியெழுப்பும்படியான சத்தியங்களை அவர்களுக்குப் போதிப்பதும் இயேசுவின் நோக்கமாயிருந்தது. அவரது போதனைகள் பிதாவிடமிருந்து வந்தவை என அவர் கூறினார் (யோவான் 14:10). இவை கவர்ந்திழுக்கும் எளிய அபிப்ராயங்களும், நம்பிக்கை மிக்க எண்ணங்களும் அல்லது பொழுதுபோக்குக் கதைகளும் அல்ல. இவையனைத்தும் பிதாவாகிய தேவனால் அருளப்பட்ட வார்த்தைகளே. இந்த வார்த்தைகள் ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை (மாற்கு 13:31), இதிலே மனுஷர் நித்திய ஜீவனைக் கண்டடைகிறார்கள் (யோவான் 6:68). இயேசுவின் போதனைகளைக் கைக்கொண்டு நடக்கிறவர்கள், தங்கள் ஜீவியத்திற்குப் பாதுகாப்பான அஸ்திபாரம் உண்டென்பதையும் கண்டடைகிறார்கள் (மாற்கு 7:24).

வழிமுறை

அன்றாட அலுவல்களில் ஈடுபட்டிருந்த மக்களை இயேசு எதிர்கொண்ட வேளைகளில், அந்த இடத்திலேதானே அவர்களுக்கு அவர் போதித்தார். ஜெப ஆலயங்களிலும் (லூக்கா 4:16), தேவாலயத்திலும் (யோவான் 8:2) அவர் போதித்தார். மேலும் அவர், தெருக்களிலும் (மாற்கு 10:17), தனியார் வீடுகளிலும் (லூக்கா 14:1) போதித்தார். போதனையைக் கவனிக்கிறவர்களின் எண்ணிக்கையை அவர் பொருட்படுத்தவில்லை. அவர் திரள் கூட்டத்தில் பேசிய போதிலும் ஒண்டியானவர்களுடனும், தனிமையான ஆண்கள் பெண்களுடனும் பேசுவதற்கு நேரத்தைச் செலவழித்தார்.

இயேசு கிறிஸ்து

அவருடைய முக்கியமானப் போதனைகளில் பெரும்பான்மையானவை தனிநபர்களுக்குப் போதிக்கப் பட்டவைகள். அவர் நிக்கொதேமுவுக்குப் போதித்தது (யோவான் 3 அதிகாரம்) இதற்கோர் நல்ல எடுத்துக் காட்டாகும். அவர் பல்வேறு இடங்களில் பரதரப்பட்ட மக்களுக்கு, பலவகையான வழிமுறைகளைப் பயன்படுத்திப் போதித்தார். இம்முறைகளில் நான்கினை நாம் ஆராய்வோம்:

1. உவமைகள். இயேசு அநேக சத்தியங்களைப் போதிப்பதற்கு உவமைகளைக் கையாண்டார். உவமை என்பது, அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களிலிருந்து கூறப்படும் எடுத்துக்காட்டு அல்லது சிறுகதை ஆகும். உவமை வழியே போதிப்பதால் மூன்று அனுகூலங்கள் உண்டு: 1) கேட்பவர்கள், கதை சொல்லப்படும்போது சம்பவங்களை கற்பனை செய்யக் கூடியதாக இருப்பதால் அவற்றை எளிதாக நினைவுகூருவார்கள், 2) இவற்றின் ஆவிக்குரிய தூதுகள் கற்றவர்களுக்கும், கல்லாதவர்களுக்கும் தெளிவாக இருந்தன. 3) தம்மைக் கேட்பவர்களின் தேவைகளுக்காக இயேசுவுக்கிருந்த கரிசனையையும் இவை வெளிப்படுத்துவதாக இருந்தன.

பல உவமைகள் முக்கியமான ஓர் சத்தியத்தைப் போதிக்கின்றன. ஸ்திரீயும் வெள்ளிக்காசும் என்ற உவமை, காணாமல் போன ஒரு ஆத்துமாவைத் தேடுவதில் கர்த்தருக்கிருக்கும் விடாமுயற்சியை எடுத்துக் காட்டுகிறது (லூக்கா 15:8-10). சில உவமைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பாடத்தைப் போதிக்கின்றன. காணாமல் போன குமாரனின் உவமை, தேவனுக்கிருக்கும் தந்தையின் அன்பை மட்டுமின்றி, மனஸ்தாபத்தின் பாவத்தையும் எடுத்துக் காட்டுகின்றன. (லூக்கா 15:11-32).

சில தருணங்களில் உவமையைக் கேட்டவர்கள் தங்களுடைய சொந்த முடிவுகளை விளங்கிக் கொள்ளுமாறு விட்டு விடப்பட்டார்கள் (மாற்கு 12:1-12). வேறு சமயங்களில், தாம் எடுத்துக் காட்டிய சத்தியத்தை, உவமையின் முடிவில் இயேசு கூறினார் (மத்தேயு 25:1-13).

இயேசுவின் உவமைகள், மற்றவர்களால் சொல்லப்பட்டவைகளைப் போலிராமல், அவரை விட்டுப் பிரிக்கக் கூடாததாயிருந்தன. அவரைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், அவருடைய உவமைகளையும் புரிந்து கொள்ளவில்லை. அவரை விசுவாசியாதவர்கள் அவருடைய உவமைகளையும் விசுவாசிக்கவில்லை. இதனை அநேகம் சந்தர்ப்பங்களில் இயேசு சுட்டிக் காட்டினார். (மாற்கு 4:11; மத்தேயு 13:13).

2. சிற்றுரைகள்: கேட்பவர்களின் உள்ளத்தில் குறிப்பிட்ட சத்தியங்களைப் பதியபண்ணும் பொருட்டு இயேசு சிற்றுரைகளைப் பயன்படுத்தினார். இவற்றில் அடிக்கடி எதிர்மாறான இரு அபிப்பிராயங்கள் ஒருங்கே வருவதுண்டு. எடுத்துக்காட்டாக: "சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத்தேயு 10:16). "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்" (மத்தேயு 10:39). "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25).

3. பொருள் விளக்கப் பாடம்: இயேசு ஆவிக்குரிய சத்தியங்களைப் போதிப்பதற்குப் பழக்கத்தில் உள்ளப் பொருட்களையும் பயன்படுத்தினார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் ஒரு சிறு பிள்ளையை சீஷர்கள் நடுவே நிறுத்தி, தாழ்மைக்கு எடுத்துக்காட்டாக அப்பிள்ளையைச் சுட்டிக் காட்டினார். (மத்தேயு 18:1-6). பிறிதொரு சமயத்தில், தேவாலயத்தின் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிற ஐசுவரியவான்களையும், ஒரு ஏழை விதவையையும் கவனித்தார்.

இயேசு கிறிஸ்து

உண்மையாகக் கொடுப்பதின் பொருளை உணர்த்தும்படி அவர் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தினார் (லூக்கா 21:1-4). அவர் மீன் பிடிக்கிறவர்களைக் கண்டு, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்" (மத்தேயு 4:19). தமது சிருஷ்டிகளுக்காகத் தேவன் கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக ஆகாயத்துப் பட்சிகளையும், காட்டுப் புஷ்பங்களையும் கவனிக்கும்படி அவர் கூறினார்.

4. வினாக்கள்: போதிக்கும் வழிமுறையாக இயேசு அடிக்கடி வினாக்களைப் பயன்படுத்தினார். ஏனெனில், அக்கேள்விகள் மனுஷரின் கவலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்புடையதாயிருந்தன. எடுத்துக்காட்டாக: "மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தேயு 16:26). "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?" (மத்தேயு 9:5). அவர் கேட்டவற்றில் மிக முக்கியமான கேள்வியாவது: "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?"(மாற்கு 8:29).

இயேசு கேள்விகளை வினவினது மாத்திரமின்றி, மற்றவர்களால் தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தார். தோமா இவ்விதம் வினவினார்: "வழியை நாங்கள் எப்படி அறிவோம்?" "அதற்கு இயேசு, நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவரும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:5,6) எனப் பதிலளித்தார்.

பொருளடக்கம்

இயேசுவின் போதனைகள் முழுவதிலும் முக்கியமான விஷயங்கள் காணப்படுகின்றன. இவற்றில் அடங்கும் மூன்று விஷயங்களாவன: தேவனுடைய ராஜ்யம் (மத்தேயு 13 அதிகாரம்), கடைசிகாலச் சம்பவங்கள் (மத்தேயு 24,25; மாற்கு 13; லூக்கா 21:5-38), தெய்வீகமும், மேசியாத்துவமும் (மத்தேயு 10:1,8; 28:18; மாற்கு 16:17-20; லூக்கா 10:9,19; யோவான் 8:58; 13:3; 16:23; 17:5; மத்தேயு 16:13-16; மாற்கு 8:27-29; லூக்கா 9:18-20). அவருடைய போதனைகளில் சில ஒரே ஒரு முறை மாத்திரம் போதிக்கப்பட்டன. மற்றவைகள் அவரிடம் கேட்கும்படி வரும் வித்தியாசமான கூட்டத்தாரின் பயனுக்காக அநேக முறை மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டன. அவருடைய போதனைகள் விதிப்படி, முறைப்படுத்தப் பட்டமையால், தமக்கடுத்தவைகளாகவே இருந்தன. அவருடைய போதனைகளைப் புரிந்து கொள்ள விரும்புகிறவர்கள், முதலாவது அவருடைய போதனைகளை விளங்கிக் கொண்டு, அவரில் விசுவாசம் வைக்க வேண்டும்.

விளைவு

இயேசுவின் போதனை கேட்போரின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும் இயேசுவைப் பிடிக்கும்படி சேவகர்களை அனுப்பியபொழுது, சேவகர்கள் வெறுங்கையுடன் திரும்ப வந்தார்கள். மார்க்கத் தலைவர்கள், "நீங்கள் ஏன் அவனைக் கொண்டு வரவில்லை" என்று கேட்டார்கள். அப்பொழுது, "அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" என்பது சேவகர்களின் பதிலாயிருந்தது (யோவான் 7:45,46). மேலும், அவர் தமது மலைப் பிரசங்கத்தை முடித்தபோது (மத்தேயு 5-7 அதிகாரங்கள்) ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்

இயேசு கிறிஸ்து

ஏனெனில், "அவர் வேதபாரகரைப் போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தார்" (மத்தேயு 7:29). அவருடைய போதனைகள் அவருடைய சத்துருக்களின் வாயை அடைத்தது (மத்தேயு 22:46), பாவிகள் மனஸ்தாபப்படும்படிச் செய்தது (லூக்கா 19:8).

இயேசுவின் போதனைகளை முதலில் கேட்டவர்கள் தொடப்பட்ட வண்ணம் இன்றைக்கும் ஜனங்களின் இருதயங்கள் தொடப்படுகின்றன. அவர்கள் மற்றவர்களின் மூலம் போதிக்கப்படும் பொழுது, அல்லது சுவிசேஷங்களைத் தாங்களாகவே வாசிக்கும் பொழுது தொடர்ந்து அறைகூவலிடுகின்றனர், மறுரூபமடைந்து உருவாக்கப்படுகின்றனர், நம்பிக்கையைப் பெறுகின்றனர். "தேவனுடைய வார்த்தையானது (தொடர்ந்து) ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும்.. உருவக் குத்துகிறதாயும்.. இருக்கிறது" (எபிரெயர் 4:12).

உண்மையில் போதகர்கள் அனைவருக்கும் பெரியப் போதகராக சுவிசேஷங்களில் இயேசு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார். அவருடைய வார்த்தையைப் போதிக்கும் நாம், அவருடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டியது அவசியம். ஜனங்களின் தேவைகளுக்கும், நிலவரங்களுக்கும் ஏற்ப அவருடைய வார்த்தைகளைப் பகிர்ந்தளிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அனைவரும் கேட்டு உணரும் விதத்தில் நாம் அவற்றைப் போதிக்க வேண்டும்.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. கிறிஸ்துவின் ஜீவியத்திலுள்ள நான்கு பெரிய காலங்கள்: அவருடைய பிறப்பும் ஊழியத்தின் ஆரம்பமும், ஆரம்ப ஊழியமும், கீர்த்தியும், பிந்திய ஊழியமும் எதிர்ப்பும், மற்றும் மரணம், உயிர்த்தெழுதலும் பரமேறுதலும்.

2. இயேசு பழைய ஏற்பாட்டு வார்த்தைகளை அதிகாரத்தோடு போதித்ததுமன்றி, தமது மலைப் பிரசங்கத்தில் அதிலும் மேன்மையானவைகளைப் பிரசங்கித்தார் (மத்தேயு 5-ஆம் அதிகாரம்)

3. இயேசுவின் போதனைகள் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டவைகள். அவர் தேவகுமாரனான படியால் அவற்றை வியாக்கியானிக்கவும், மிகைப்படுத்தவும் அவருக்கு அதிகாரமிருந்தது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசனங்களையும், சம்பவங்களையும் தமக்குத் தாமே உரியதாக்கிப் பேசினார்.

4. இயேசுவின் போதனையின் நோக்கங்கள் பிதாவை வெளிப்படுத்துவதும், மனிதர் தங்கள் வாழ்க்கையைத் தட்டியெழுப்பக் கூடிய சத்தியத்தின் வார்த்தைகளை அவர்களுக்கு அளிப்பதுமாயிருந்தன.

5. இயேசு உவமைகள், சிற்றுரைகள், பொருள் விளக்கப் பாடங்கள், வினாக்கள் போன்றவற்றைப் போதனை வழிமுறையாகக் கையாண்டார்.

6. தேவனுடைய ராஜ்யம்; தேவனோடும் ஒருவரோடொருவரும் கொண்டுள்ள மனுஷனின் உறவுகள்; அவருடைய தெய்வீகமும், மேசியாத்துவமும் ஆகியவை இயேசுவின் போதனையின் முப்பெரும் விஷயங்களாகும்.

வசனங்கள்	பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டது	நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்
மத்தேயு 5:21,22	கொலை செய்யாதிருப்பாயாக	தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்.
மத்தேயு 5:27,28	விபசாரஞ் செய்யாதிருப்பாயாக	ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.
மத்தேயு 5:33,34	ஆணைகளைச் செலுத்துவாயாக	பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம்.
மத்தேயு 5:43,44	சத்துருவைப் பகைப்பாயாக	உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்.

இயேசு கிறிஸ்து

சுவிசேஷங்கள்

கிறிஸ்துவின் சரிதையை எடுத்தியம்புவதில் சுவிசேஷங்கள் அனைத்திலும் ஒரே விதமான அடிப்படை மாதிரி கையாளப்பட்டுள்ளன. இருப்பினும், மாதிரியில் மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிஷேங்கள் ஒன்றுக்கொன்று பெரிதும் ஒத்திருக்கின்றன. ஆதலால், இச்சுவிசேஷங்கள் 'சமநோக்கு நற்செய்தி நூல்கள்' என அழைக்கப்படுகின்றன. (**Synoptic** என்பதின் கிரேக்கப் பதத்தின் பொருள் 'ஒன்றாய்ப் பார்' என்பதாகும்)

'சமநோக்கு' நற்செய்தி நூல்களில் பெரும்பாலான விஷயங்கள் உட்பொருளிலும், அமைப்பிலும் ஒத்திருக்கின்றன. (குஷ்டரோகியின் விவரம் காண்க, மத்தேயு 8:1-4; மாற்கு 1:40-45; லூக்கா 5:12-16). இருப்பினும், 'சமநோக்கு' சுவிசேஷங்கள் ஒன்றுக்கொன்றின் மறுநகல்கள் அல்ல. இம்மூன்று சுவிசேஷங்களின் உட்பொருளை நாம் ஒப்பிட்டுக் காணும் பொழுது, இவை புலப்படும்:

1. மாற்கு சுவிசேஷத்தில் காணப்படும் விஷயங்களில் பெரும்பாலானவை மத்தேயுவிலும், லூக்காவிலும் இடம் பெற்றுள்ளன.

2. மாற்கு சுவிசேஷத்தில் காணப்படாத 200 வசனங்கள் மத்தேயுவிலும், லூக்காவிலும் உள்ளன.

3. மத்தேயுவில் மூன்றில் ஒரு பங்கு தன்னில்தானே தனிச்சிறப்புடையது.

4. லூக்காவில் இரண்டில் ஒரு பங்கு தன்னில்தானே தனிச்சிறப்புடையது.

இவ்வுண்மைகளை விவரிக்க அநேக விளக்கங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்டுள்ள முடிவுரைகள் மிகவும் ஏற்புடையவைகள்:

1. ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பற்றிய உண்மை விவரங்களைக் கொண்டிருந்த நற்செய்தி அறிவிப்பு அமைப்பு (கிரேக்க மொழியில் 'கெரிக்மா' எனப்படும்) ஒன்றிருந்தது. ஆதி அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபொழுது இந்த அமைப்பின் விவரங்களையே பயன்படுத்தினர் (காண்க அப்போஸ்தலர் 2:22,23; 13:23-33; 1 கொரிந்தியர் 15:1-11).

2. மாற்கு சுவிசேஷம் இந்த அடிப்படை விவரங்களைக் கொண்டதாகும்.

3. மத்தேயு சுவிசேஷம் இந்த அடிப்படை விவரங்களைக் கொண்டுள்ளது. இருப்பினும், இயேசுவின் போதனைகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களையும் மத்தேயு சேர்த்திருக்கிறார். தன்னுடைய நோக்கங்களுக்குப் பொருந்தும் வகையில் விவரங்களை இவர் ஒழுங்குபடுத்தியிருக்கிறார்.

4. லூக்கா சுவிசேஷமும் இந்த அடிப்படை விவரங்களைக் கொண்டுள்ளது. இருப்பினும், மத்தேயு, மாற்கு ஆகியோரால் எழுதப்படாத உவமைகளையும் அற்புதங்களையும் லூக்கா சேர்த்திருக்கிறார். இயேசுவின் போதனைகளைக் கேட்ட ஜனங்களிடமிருந்து நேரிடையாக அவர் பெற்றுக் கொண்ட தகவல்களையும் தான் கண்டதும் அனுபவித்ததுமான அற்புதங்களையும் அவர் எழுதியிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். எந்த விஷயங்கள் சேர்க்கப்பட வேண்டும், எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய அவர்களுடைய தீர்மானங்கள் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டன.

இயேசு கிறிஸ்து

நமக்குக் கிடைக்கும்படி கர்த்தரால் நிர்ணயிக்கப்பட்டவை சுவிசேஷ விவரங்கள் என்பது நிச்சயம்.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. கிறிஸ்துவின் சரிதையை எடுத்தியம்புவதில் சுவிசேஷங்கள் அனைத்திலும் ஒரேவிதமான அடிப்படை மாதிரி கையாளப் பட்டுள்ளது. இருப்பினும், இந்த அடிப்படை மாதிரியானது மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்களில் பெரிதும் ஒத்திருக்கின்றது. இக்காரணத்திலேயே இவை 'சமநோக்கு' சுவிசேஷங்கள் என அழைக்கப்படுகின்றன.

2. "சமநோக்கு" சுவிசேஷங்களுக்கிடையே தெளிவான தொடர்பு உள்ளது.

அ. தன்னுடைய குறிப்பிட்ட நோக்கத்தின்படி ஒவ்வொரு ஆக்கியோனும் அடிப்படை உண்மைகளை எழுதியுள்ளனர்.

ஆ. மார்குவினால் எழுதப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிய அடிப்படை உண்மைகளை மத்தேயு, லூக்கா இருவரும் சேர்த்துள்ளனர்.

சபை

இளம் சபைகளுக்கு யாக்கோபு, கலாத்தியர் நிருபங்கள்

புதிய ஏற்பாட்டு நிருபங்களில் பல அப்போஸ்தலர் நடபடிகளுடன் தொடர்பு உடையவைகள். நடபடிகள் உள்ளடங்கியுள்ள வரலாற்று காலத்தில் இந்த நிருபங்கள் எழுதப்பட்டன. இவற்றை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:

அ. அப்போஸ்தலர் 15-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடும் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பு எழுதப்பட்டவைகள்: யாக்கோபு, கலாத்தியர்.

ஆ. பவுலின் இரண்டாம், மூன்றாம் சுவிசேஷப் பிரயாணங்களுடன் சம்பந்தப் பட்டவைகள்: 1,2 தெசலோனிக்கேயர், 1,2 கொரிந்தியர், ரோமர்

இ. பவுல் ரோமாபுரியில் முதலாவது காவலில் இருந்தபொழுது எழுதப்பட்டவைகள்: எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன்.

ரோம சாம்ராஜ்யமெங்கும் சுவிசேஷம் பிரபல்யமடைந்தது. யூதரும், புறஜாதியாரும் சபையின் ஓர் அங்கமானார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையின் இலக்கணம் குறித்து ஆதி யூத விசுவாசிகளுக்கு யாக்கோபு எழுதினார். கலாத்தியருக்குப் பவுல் இரட்சிப்பின் அடிப்படை சத்தியத்தை விவரித்து எழுதியிருக்கிறார்.

எருசலேம் ஆலோசனைச் சங்கம் கூடியதற்குப் பிற்பாடு, பவுல் தனது இரண்டாம், மூன்றாம் சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கண்ட வருஷங்களில் சபையோடு சம்பந்தப்பட்ட நிருபங்களை எழுதினார் . மக்கெதோனியா, அகாயா, இத்தாலி போன்ற இடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய சபைகளின் தேவைகளைப் பவுல் இந்த நிருபங்கள் வாயிலாகச் சந்தித்தார்.

இந்த நிருபங்களை நாம் படிக்கும்போது, இந்நாட்களில் நாம் எதிர்கொள்ளும் அதே இடர்களை ஆதி விசுவாசிகளும் அனுபவித்தனர் என்பதைக் கண்டு கொள்ளலாம். அவர்களில் சிலர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிக் குழப்பமுற்றிருந்தனர். சிலர் தங்களுக்குள்ளே பிரிவினைகளால் குதறப் பட்டிருந்தனர். வேறு சிலரோ, தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தில் முதிர்ச்சி பெறவும், கிறிஸ்துவை விசுவாசிப்பதின் பொருள் என்ன என்பதை முழுமையாக விளங்கிக் கொள்ளவும் நாட்ட முற்றிருந்தனர். விசுவாசிகளின் இத்தகைய பல்வேறு தேவைகளுக்கான நடத்திப்பையும், புத்திமதியையும் பவுலின் நிருபங்களின் வாயிலாகக் கர்த்தர் வழங்கினார்.

பவுலின் இரண்டாம், மூன்றாம் சுவிசேஷப் பிரயாணங்களில் எழுதப்பட்ட நிருபங்களின் கீழ் அடங்குபவன 1,2 தெசலோனிக்கேயர், 1,2 கொரிந்தியர், ரோமர் ஆகியவையாகும். தனது பிரயாணங்களில் இவற்றைப் பவுல் எழுதினபடியால், இவை "பிரயாண நிருபங்கள்" என அழைக்கப்படுகின்றன.

சபை தொடர்ந்து வளருகிறது

தனது சுவிசேஷப் பிரயாணங்களில் பவுல் சில கடிதங்களை எழுதினார். அவை "பிரயாண நிருபங்கள்" என அழைக்கப்படுகின்றன. புதிய விசுவாசிகள் அனுபவித்தக் கஷ்டங்களில் சிலவற்றை இந்த நிருபங்களில் நாம் காணலாம். கள்ளச் சகோதரரால் எதிர்ப்பட்டப் பலத்த எதிர்ப்புகளைப் பவுல் சந்தித்த பொழுது, அப்போஸ்தலன் என்னும் அதிகாரத்தை அவர் பிரயோகிப்பதில் உண்டானத் தனிப்பட்டப் போராட்டங்கள் சிலவற்றையும் நாம் இந்த நிருபங்களில் காணலாம்.

சபை

பிலேமோன், எபேசியர், கொலோசெயர், மற்றும் பிலிப்பியருக்கு எழுதிய கடிதங்கள் "காவல் நிருபங்கள்" என அழைக்கப்படுகின்றன. பவுல் ரோமாபுரியில் காவலில் இருந்தபொழுது இவற்றை எழுதினார். (அப்போஸ்தலர் 28:17-31). இந்த வரலாற்றுக் காலத்தில் சபை எவ்விதமிருந்தது என்பதை நாம் காண்பதற்கு இவை உதவியாயிருக்கின்றன. மேலும், பவுலின் பண்புகளில் பலவற்றை இவை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

கிறிஸ்துவின் சுபாவம் மற்றும் சபையின் இலட்சணம் பற்றிக் கூடுதலாகக் கற்றுக் கொள்ள ஆயத்தமாயிருந்த விசுவாசிகளுக்கு எபேசியர், கொலோசெயர் நிருபங்கள் எழுதப்பட்டன. கிறிஸ்தவ சகோதரத்துவம், மன்னிக்கும் தன்மை ஆகியவை பற்றி பவுலுக்கிருந்த அறிவை பிலேமோன் வெளிப்படுத்துகிறது. பவுலின் ஆவிக்குரிய சுய விளக்கமே பிலிப்பியர் ஆகும். இந்த நிருபங்களை நாம் கற்றுக் கொள்ளும் பொழுது, சபை எவ்வாறு தொடர்ந்து வளர்ந்தது என்பதை நாம் காண்போம். பவுலைப்பற்றியும், ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவுக்காக அவருக்கிருந்த முழு அர்ப்பணிப்பைப் பற்றியும் நாம் கூடுதலாகக் கற்றுக் கொள்வோம்.

பவுலின் காவல்

"காவல் நிருபங்கள்" நான்கிலும் தனது சிறைவாசத்தைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார் (பிலேமோன் 1, எபேசியர் 3:1; 4:1; கொலோசெயர் 1:24; 4:10; பிலேமோன் 1:12,13). கொலோசெயர், பிலிப்பியர், மற்றும் எபேசுவைச் சுற்றியிருந்தப் பகுதியைப் பவுல் நேரில் சென்று பார்வையிடக் கூடாதவராக இருந்த போதிலும், தனது நிருபங்களின் மூலம் அங்கு நிறுவப்பட்டிருந்த சபைகளுக்கு அவர் தொடர்ந்து ஊழியம் செய்தார்.

தனது சுவிசேஷப் பிரயாணத்தின் முடிவில் பவுல் எருசலேமுக்குச் சென்று அங்கிருந்த தலைவர்களைச் சந்தித்தார். (அப்போஸ்தலர் 21:17-19). இங்கு பிரார்த்தனை பண்ணிக் கொண்டவர்களாகிய நாலு பேரின் சுத்திகரிப்பை நிறைவேற்ற இவர் சம்மதித்தார். மோசேயின் பிரமாணத்தை முற்றிலுமாய் விட்டு வரும்படி அவர் யூதர்களுக்குப் போதிக்கவில்லை. என்பதைக் கண்பிக்கும்படிக்கு அவரும் தனிப்பட்ட விதத்தில் பொருத்தனை பண்ணிக் கொண்டார் (அப்போஸ்தலர் 21:20-26). இதை நிறைவேற்றும்படி அவர் ஒத்துக் கொண்ட சில நாட்களுக்குப் பிறகு, பொருத்தனையை நிறைவேற்றும்படி அவர் தேவாலயத்தில் இருந்த பொழுது ஜனக்கூட்டத்தினால் அவர் தாக்கப்பட்டார். தேவாலயத்தில் தடைசெய்யப் பட்டப் பகுதிக்குள் புறஜாதிகளைக் கூட்டிச் சென்றார் எனக் கூறி ஆசியாவிலிருந்து வந்திருந்த யூதர்கள் அவருக்கு விரோதமாக ஜனங்களைத் தூண்டி விட்டார்கள். (21:27-29).

அமளி மிகவும் அதிகரித்தபடியால், ஜனங்களின் கோபத்திற்கானக் காரணத்தைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் பவுலைப் பத்திரப்படுத்தும்படியாகக் கொண்டு வரும்படி, ரோம சேனாபதி தனது போர்ச் சேவகரை அனுப்பினான். நடந்தது யாது என்பதைத் தீர்மானிப்பதற்காகப் பவுல் தனது நியாயங்களைக் கூறும்படிக்கு சேனாபதி அனுமதித்தான். ஜனங்களுக்கும், ஆலோசனைச் சங்கத்துக்கும் முன்னிலையில், பவுல் தனது நியாயங்களை எடுத்துரைத்த பொழுது, ஜனங்களின் மூர்க்கம் மும்முரமாயிற்று.

ஜனங்கள் கூக்குரலிட்ட முகாந்தரத்தை அறியும்படிக்கு, அவரைச் சவுக்கால் அடித்து விசாரிக்கும்படி சேனாபதி கட்டளையிட்ட போது, தான் ரோமப் பிரஜை எனப் பவுல் கூறி, தனது உரிமைக்காக வாதாடினார். ஆதலால், தேசாதிபதியாகிய பேலிக்ஸ் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படும்படி சேனாபதி பவுலை செசரியாவுக்கு அனுப்பினார். பவுலின் வழக்கைக் கேட்ட பேலிக்ஸ், தீர்மானம் எடுப்பதைத் தாமதப்படுத்தினார். ஆதலால், பவுல் செசரியாவின் சிறைச்சாலையில் இரண்டு வருடங்கள் தங்க வேண்டியதாயிற்று.

சபை

புதிய தேசாதிபதியாக பெஸ்து நியமிக்கப்பட்டபொழுது, பவுலின் வழக்கை அவர் மறுபரிசீலனை செய்தார். பவுல் பெஸ்துவின் முன்னிலையில் கொண்டு வரப்பட்டபொழுது, (ரோமப் பிரஜைக்கிருந்த உரிமையின்படி) தான் ராயனுக்கு முன்பாக விசாரிக்கப்பட வேண்டுமென்று அபயமிட்டார். அதன்படி அவர் விசாரிக்கப்படுவதற்காக ரோமாபுரிக்குச் செல்லும்படி கட்டளையிடப்பட்டார்.

பவுல் ரோமாபுரிக்குச் சென்ற கப்பற் பிரயாணத்தில் குறிப்பிடத்தக்கப் பல சம்பவங்கள் நிகழ்ந்தன: கடுங்காற்று, கப்பற்சேதம், பவுலை விஷப்பூச்சி கடித்த போதிலும் அற்புத விதமாக ஒரு தீங்கும் அடையாமலிருந்தது; மெலித்தா தீவில் அநேக வியாதிக்காரர் குணமாக்கப்பட்டது (அப்போஸ்தலர் 27:13-28:10) முதலானவையாகும். இந்தச் சம்பவங்கள், பவுலின் குணாசீலத்தின் கூடுதல் அம்சங்களை நமக்கு வெளிப்படுத்துவதுடன், அபாயகரமான, உயிருக்கே உலை வைக்கும்படி அச்சுறுத்தப்பட்ட சூழ்நிலைகளின் மத்தியிலும் அவருக்கிருந்த அமைதியான தீர்மானத்தையும், தேவன் பேரிலிருந்த நம்பிக்கையையும் காண்பிக்கின்றன.

பவுல் ரோமாபுரி சென்றடைந்ததும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 28:16). அவர் எங்கும் பிரயாணஞ் செய்யக் கூடாதவராக இருந்தார், ஆனால், கிறிஸ்துவைப் பற்றிப் போதிக்கவும், பிரசங்கிக்கவும் முழு சுயாதீனம் அவருக்கிருந்தது (அப்போஸ்தலர் 28:30,31). ராயனுக்கு முன்பாகப் பவுல் விசாரிக்கப்பட்டதின் விவரம் ஒன்றும் அப்போஸ்தலர் நடபடிகளில் இடம் பெறவில்லை. லூக்கா நடபடிகளை எழுதிய சமயத்தில் இதைப் பற்றிய தகவல்கள் இல்லாமலிருந்திருக்கலாம். இருப்பினும், நமக்கிருக்கும் அத்தாட்சிகளிலிருந்து, பவுல் ரோமாபுரியில் காவலில் இருந்த வேளையில் நான்கு நிருபங்களை எழுதியிருக்கிறார் எனத் தெரியலாகிறது.

சபையின் பிரச்சினைகளும் நம்பிக்கையும்

சபை தீர்வு காண்கிறது

காவல் நிருபங்கள் கிறிஸ்துவையும், சபையையும் பற்றிய சத்தியங்களை வெளிப்படுத்துகின்றன. பவுலின் குணாசீலத்தையும், ஊழியத்தையும் இவை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. மேலும், பவுல் ரோமாபுரியில் காவலில் இருந்தபொழுது சபை எவ்வாறு ஆவிக்குரிய பெரும் முதிர்ச்சியை அடைந்ததென்பதை நாம் காணும்படி இந்த நிருபங்கள் உதவி புரிகிறது.

பவுல் முதல் தடவை ரோமாபுரியில் காவலில் இருந்ததற்குப் பிற்பாடுள்ள வருஷங்களில் ஐந்து நிருபங்களை எழுதினார். இந்த வருடங்களில் சபை தொடர்ந்து விரிவடைந்தது. அதேவேளையில் இந்தக் காலகட்டத்தில் எதிர்ப்புகளும் பெருகின. பூர்வ யூத மார்க்கத்துக்கும், கிறிஸ்தவர்களின் புதிய விசுவாசத்துக்கும் இடையே உள்ள தொடர்பை மிகத் தெளிவுடன் வரையறுப்பதும், விளங்கிக் கொள்ள வேண்டியதும் அத்தியாவசியமாயிருந்தது.

தேவ ஆவியால் அருளப்பட்ட நடத்திப்பின்படியும், ஞானத்தின்படியும் சபைத் தலைவர்கள் சவாலைச் சந்தித்தார்கள். சபைத் தலைவர்களுக்கானத் தகுதிகள் வரையறுக்கப் பட்டன. உபத்திரவங்களைப் பற்றிய மனநிலை தெளிவுபடுத்தப்பட்டன. கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய வெளிப்படுத்தலின் வெளிச்சத்தில் யூதமார்க்கத்தைப் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு நடவடிக்கையும் சபையின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது.

சபை

இக்காலத்தில் சபையானது தனது ஒப்பற்ற வம்சாவளியைப் பற்றிய முழுமையான அறிவைப் பெற்றுக் கொண்டு தனிப்பெரும் அமைப்பாக முன்னேறத் தொடங்கியது.

சபையின் கொந்தளிப்பும், எதிர்பார்ப்பும்

1,2 தீமோத்தேயு, தீத்து, எபிரெயர் ஆகிய நிருபங்கள் சபையானது அதன் அமைப்பில் எவ்விதம் விருத்தியடைந்தது என்பதையும்; உபத்திரவங்களில் எவ்வாறு செயலாற்ற வேண்டுமென்பதையும் விளக்குகிறது. வளர்ந்து வந்த இளம் சபைக்கு பல வழிகளில் இவை கடினமான வருடங்களாகும். கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபார சத்தியங்களை சவால்விடும்படிக்கு கள்ளப் போதகர்கள் எழும்பினர். உபத்திரவங்கள் மிகவும் மும்முரமடைந்தன. விசுவாசிகளில் சிலர் உலகத்தோடு ஒத்துப்போகும்படி, பெருகிவரும் சோதனைகளுக்குத் தங்களை இணங்கிக் கொடுத்தனர்.

ஆனால் மீண்டும் தேவ ஆவியானவர் ஞானத்தையும், வழிநடத்துதலையும் அருளினார். பேதுரு, யூதா, யோவான் ஆகியோரால் எழுதப்பட்ட நிருபங்களின் மூலம் கள்ள உபதேசத்தைப் பற்றி விசுவாசிகள் எச்சரிக்கப் பட்டார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தின் மூலம், கடுமையான பாடுகளின் மத்தியிலும் கிறிஸ்துவுக்காக உண்மையாய் நிலைத்திருக்கும் படி அவர்கள் ஊக்குவிக்கப்பட்டதுடன், அவருடைய மகிமையான வருகையையும், முழுமையான ஜெயத்தையும் பற்றிய உன்னதமான தரிசனமும் கொடுக்கப் பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தை முதலாவது வாசித்த விசுவாசிகளைக் காட்டிலும் நாம்அதிலுள்ள தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலுக்கு மிகவும் சமீபமாயிருக்கிறோம்.